www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

KSJ
Knowledgeful Successful Joyful

# சுடரொளி தமிழ் உரை

• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி



# 10th தமிழ்

புதிய பாடத்திட்ட அடிப்படையில் உருவாக்கம்

- வினாத்தாள் அடிப்படையிலான உரை
- மீத்திறன் மாணவர்களுக்கான கூடுதல் வினாக்கள்
- மெல்ல மலரும் மொட்டுகளுக்கான எளிய விடைகள்
- அரசு பொதுத் தேர்வு, பெற்றோர் ஆசிரியர் கழக மாதிரி வினாத்தாள்கள் & விடைக்குறிப்பு

For Orders : 89036 85635 / 74180 21847

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பொருளடக்கம்


| வ. எண். | வினாத்தாள் வடிவமைப்பு | வினாத்தாள் வினா எண் | பாடநூல் பக்க எண் | உரைநூல் பக்க எண் |
|---|---|---|---|---|
| 1. | மனப்பாடப்பகுதி | 21,34 | 2,33,54,82,106,109, 134,136,137,169, 184,213 | 1,2 |
| | **பகுதி –I (15x1=15)** | | | |
| 2. | பலவுள் தெரிக. | 1-11 | 19,43,65,93,121,147, 178,197,223 | 3-15 |
| 3. | பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருதல். | 12-15 | - | 16-28 |
| | **பகுதி –II (9x2=18)** | | | |
| 4. | **பிரிவு –I (4x2=8)** விடைக்கேற்ற வினா அமைத்தல் | 16-21 16 | - | 29,30 |
| 5. | செய்யுள், உரைநடை குறு வினாக்கள் | 17-20 | 19,20,43,44,65,66,74, 93,121,147,157,178, 197,198,223,224 | 31-40 |
| 6. | **பிரிவு –II (5x2=10)** இலக்கண வினாக்கள் | 22 - 28 - | 19,20,43,44,65,66,93, 121,147,178,197,198, 223,224 | 40-42 |
| 7. | கற்பவை கற்றபின், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு | - | 18,42,64,92,120,150, 180,181,199,200,225 | 42-52 55-66 |
| 8. | கலைச்சொற்களைத் தமிழாக்கம் செய்தல் | - | 24,48,69,97,126,153, 182,200,229 | 52 |
| 9. | அகராதியில் பொருள் காணுதல் | - | 23,47,68,97,125,152, 181,200,228 | 53 |
| 10. | பகுபத உறுப்பிலக்கணம் | - | 34,55,57,84,110,134, 169,215 | 54,55 |
| | **பகுதி –III (6x3=18)** | | | |
| 11. | **பிரிவு –I (2x3=6)** உரைநடை சிறுவினாக்கள் | 29,30 | 20,44,66,94,122,148, 179,198,224 | 67-70 |
| 12. | பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை அளித்தல் | 31 | - | 71,72 |
| 13. | **பிரிவு –II (2x3=6)** செய்யுள் சிறுவினாக்கள் | 32,33 | 20,44,66,94,122,148, 179,198,224 | 72-76 93-97 |
| 14. | **பிரிவு –III (2x3=6)** இலக்கண வினாக்கள் | 35,36 | - | 76-80 |
| 15. | அலகிடுதல் | 37 | 196 | 81-92 |


• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி –IV (5x5=25)


| | | | | |
|---|---|---|---|---|
| 16. | செய்யுள் நெடுவினா | 38 | - | 98-107 |
| 17. | கடிதம், உரை எழுதுதல் | 39 | - | 107-114 |
| 18. | காட்சியைக் கண்டு கவினுற எழுதுதல் | 40 | 23,47,68,97,125,152, 182,201,229,181,183 | 115-118 |
| 19. | படிவங்கள் | 41 | 124,227 | 118-120 |
| 20. | நிற்க அதற்குத் தக | 42(அ) | 24,48,69,98,126,153, 182,201,229 | 121-124 |
| 21. | மொழிபெயர்த்தல் | 42(ஆ) | 21,45,67,95,123,149, 180,199,225 | 124-127 |
| **வினாத்தாள் அமைப்பைத் தவிர்த்து எஞ்சியப் பகுதிகள்** | | | | |
| 22. | செய்யுள் நயம் பாராட்டுதல் | - | 22,68,96,200 | 128-132 |
| 23. | வசன நடையில் எழுதுதல் | - | 46 | 132 |
| 24. | பத்தியைப் படித்துச் சுருக்கி எழுதுதல் | - | 67 | 133 |
| 25. | கதையாக்குதல் | - | 68 | 133 |
| 26. | பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக மாற்றுதல் | - | 150 | 134 |
| 27. | நாட்டுப்புறப் பாடலுக்கேற்ற சூழலை எழுதுதல் | - | 151 | 134 |
| 28. | கவிதையை உரைநடையாக மாற்றுதல் | - | 181 | 134,135 |
| 29. | பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுதல் | - | 199 | 135,136 |
| 30. | குறுக்கெழுத்துப் புதிர் | - | 226 | 136,137 |
| 31. | விளம்பரத்தைச் செய்தியாக மாற்றுதல் | - | 228 | 137 |
| **பகுதி – V(3x8=24)** | | | | |
| 32. | உரைநடை நெடுவினாக்கள் | 43 | 20,44,66,94,122,148, 179,198,224 | 138-147 |
| 33. | துணைப்பாட நெடுவினாக்கள் | 44 | - | 147-156 |
| 34. | பொதுக்கட்டுரைகள் | 45 | - | 157-172 |
| 35. | செய்யுள், உரைநடை, துணைப்பாடம் கற்பவை கற்றபின் வினாக்கள் | - | - | 172-190 |
| 36. | மெல்ல மலரும் மொட்டுகளுக்கான உரைநடை நெடுவினாக்கள் | - | 20, 44, 66, 94, 122, 148, 179, 198, 224 | 191-193 |
| 37. | மெல்ல மலரும் மொட்டுகளுக்கான பொதுக்கட்டுரைகள் | - | - | 194-205 |
| 38. | அறிவை விரிவு செய் | - | - | 206 |
| 39. | விடைக்குறிப்புகள் | - | - | 207-211 |




● ஞானம் ● ஜெயம் ● மகிழ்ச்சி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# 1. மனப்பாடப் பகுதி

## அன்னை மொழியே

**இயல் - 1**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## முல்லைப்பாட்டு

**இயல் - 2**

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்.

- நப்பூதனார்.

## காசிக்காண்டம்

**இயல் - 3**

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

- அதிவீரராம பாண்டியர்

## திருக்குறள்

**மெய் உணர்தல்**

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

**பெரியாரைத் துணைக்கோடல்**

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

**கண்ணோட்டம்**

பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

**ஆள்வினை உடைமை**

அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

- திருவள்ளுவர்

## பெருமாள் திருமொழி

**இயல் - 4**

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

- குலசேகராழ்வார்

## நீதி வெண்பா

**இயல் - 5**

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

- கா. ப. செய்குதம்பிப் பாவலர்

## திருவிளையாடற்புராணம்

**மன்னன், புலவரிடம் மன்னிப்பை வேண்டுதல்**

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

- பரஞ்சோதி முனிவர்





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – I (15x1=15)

### 1. பலவுள் தெரிக

**இயல் - 1**

1. **'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது.........................**

   அ. வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
   ஆ. பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
   இ. ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
   ஈ. வணிகக் கப்பல்களும் அணிகலன்களும் **விடை: அ**

2. **'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள் - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது....................**

   அ. இலையும் சருகும் ஆ. தோகையும் சண்டும்
   இ. தாளும் ஓலையும் ஈ. சருகும் சண்டும் **விடை: ஈ**

3. **எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்..................**

   அ. எந் தமிழ் நா ஆ. எந்த தமிழ் நா
   இ. எம் தமிழ் நா ஈ. எந்தம் தமிழ் நா **விடை: இ**

4. **'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது'- தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே.......................**

   அ. பாடிய; கேட்டவர் ஆ. பாடல்; பாடிய
   இ. கேட்டவர்; பாடிய ஈ. பாடல்; கேட்டவர் **விடை: ஈ**

5. **வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ............**

   அ. குலை வகை ஆ. மணி வகை
   இ. கொழுந்து வகை ஈ. இலை வகை **விடை: ஆ**

**இயல் - 2**

6. **"உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
   உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?**

   அ. உருவகம், எதுகை ஆ. மோனை, எதுகை
   இ. முரண், இயைபு ஈ. உவமை, எதுகை **விடை: ஆ**

7. **செய்தி - 1 : ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15-ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.**

   **செய்தி - 2 : காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.**

   **செய்தி - 3 : காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம்செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!**

   அ. செய்தி 1 மட்டும் சரி ஆ. செய்தி 1,2 ஆகியன சரி
   இ. செய்தி 3 மட்டும் சரி ஈ. செய்தி 1,3 ஆகியன சரி **விடை: ஈ**

8. **"பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?**

   அ. கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ. கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   இ. கடல் நீர் ஒலித்தல் ஈ. கடல் நீர் கொந்தளித்தல் **விடை: அ**





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**39. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ...............**

அ. இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ. என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
இ. இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ. என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால் **விடை: அ**

**40. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ................**

அ. அகவற்பா ஆ. வெண்பா இ. வஞ்சிப்பா ஈ. கலிப்பா **விடை: அ**

**இயல் - 9**

**41. "இவள் தலையில் எழுதியதோ**
**கற்காலம்தான் எப்போதும்........." இவ்வடிகளில் கற்காலம் என்பது..........**

அ. தலைவிதி ஆ. பழைய காலம் இ. ஏழ்மை ஈ. தலையில் கல் சுமப்பது **விடை: ஈ**

**42. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது.........**

அ. அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் ஆ. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
இ. அறிவியல் முன்னேற்றம் ஈ. வெளிநாட்டு முதலீடுகள் **விடை: ஆ**

**43. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று .............. ..................வேண்டினார்.**

அ. கருணையன் எலிசபெத்துக்காக ஆ. எலிசபெத் தமக்காக
இ. கருணையன் பூக்களுக்காக ஈ. எலிசபெத் பூமிக்காக **விடை: அ**

**44. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி..........**

அ. உவமை ஆ. தற்குறிப்பேற்றம் இ. உருவகம் ஈ. தீவகம் **விடை: இ**

**45. 'கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்' - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது...........**

அ. தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.
ஆ. சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.
இ. அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்.
ஈ. அழகியலுடன் இலக்கியம் படைத்தார். **விடை: ஆ**

## கூடுதல் வினா விடைகள்

**இயல் - 1**

**1. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டஇயக்குநராகப் பணியாற்றியவர்........**

அ) தமிழழகனார் ஆ) இளங்குமரனார் இ) சச்சிதானந்தன் ஈ) பாவாணர் **விடை: ஈ**

**2. மொழிஞாயிறு என்றழைக்கப்படுபவர்............**

அ) சச்சிதானந்தன் ஆ) பெருஞ்சித்திரனார் இ) பாவாணர் ஈ) எழில்முதல்வன் **விடை: இ**

**3. சாகும்போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும் என்றவர்...........**

அ) இரா.இளங்குமரனார் ஆ) சச்சிதானந்தன் இ) தமிழழகனார் ஈ) திரு.வி.க. **விடை: ஆ**

**4. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர்...........**

அ) பெருஞ்சித்திரனார் ஆ) பாவாணர் இ) தமிழழகனார் ஈ) இரா.இளங்குமரனார் **விடை: ஈ**

**5. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு, முதல் மொழி.........**

அ) சென்னை, தமிழ் ஆ) தமிழ்நாடு, தமிழ்
இ) சிங்கப்பூர், மலையாளம் ஈ) மலேசியா, தமிழ் **விடை: ஈ**

**6. தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி முறையே அமைந்த சொற்கள்.........**

அ) கண், எட்டு, படம் பார்த்தனர் ஆ) எட்டு, கண், பாடினான்
இ) தாமரை, பாடம் படித்தேன், பாடல் ஈ) கண், ஓடிப் பார்த்தேன், தாமரை **விடை: ஈ**

**7. செய்யுளிசை அளபெடையில் முதல், இடை, கடையில் அளபெடுத்தல் முறையே.........**

அ) நல்ல படாஅ பறை, ஓஒதல் வேண்டும், உறாஅர்க்கு உறுநோய்
ஆ) ஓஒதல் வேண்டும், நல்லபடாஅ பறை, உறாஅர்க்கு உறுநோய்
இ) உறாஅர்க்கு உறுநோய், நல்லபடாஅ பறை, ஓஒதல் வேண்டும்
ஈ) ஓஒதல் வேண்டும், உறாஅர்க்கு உறுநோய், நல்ல படாஅ பறை **விடை: ஈ**





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## 3. பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருதல்

### அட்டவணை - செய்யுள்

| இயல் | | செய்யுள் தலைப்பு | ஆசிரியர் பெயர் | நூல், தலைப்பு, தொகுப்பு | ஆசிரியரின் பிற நூல்கள் | ஆசிரியரின் பிற சிறப்புகள் | பாடல் தொடக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| இயல் 1 | *(i)* | அன்னைமொழியே | பாவலரேறு பெருஞ்சித்திரனார்<br>**இயற்பெயர்** : துரைமாணிக்கம் | **நூல்** : கனிச்சாறு<br>**தலைப்பு** : தமிழ்த்தாய் வாழ்த்து,<br>முந்துற்றோம் யாண்டும் | உலகியல் நூறு, பாவியக்கொத்து,<br>நூறாசிரியம், எண்சுவை எண்பது,<br>மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள்.<br>**உரை நூல்கள் :**<br>திருக்குறள் மெய்ப்பொருளுரை<br>(தமிழுக்குக் கருவூலமாய்<br>அமைந்துள்ளது) | தென்தமிழ், தமிழ்ச்சிட்டு இதழ்கள்<br>மூலம் தமிழுணர்வைப் பரப்பினார். | அன்னை மொழியே!...<br>தென்னன் மகளே!...<br>செந்தமிழே!....<br>உந்தி உணர்வெழுப்ப... |
| | *(ii)* | இரட்டுற மொழிதல் | சந்தக்கவிமணி தமிழழகனார்<br>**இயற்பெயர்** : சண்முகசுந்தரம் | தனிப்பாடல் திரட்டு (ஐந்தாம்பகுதி - கழகப்பதிப்பு) | பன்னிரண்டு சிற்றிலக்கிய நூல்கள் | -------- | முத்தமிழ் துய்ப்பதால்.... |
| இயல் 2 | *(i)* | காற்றேவா! | பாரதியார்<br>(மகாகவி சுப்பிரமணிய பாரதியார்) | **பாரதியார் கவிதைத் தொகுப்பு**<br>**தலைப்பு** : காற்று | **காவியங்கள்** :<br>குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம்<br>**நீதி நூல்கள் :**<br>கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு,<br>புதிய ஆத்திசூடி | பாட்டுக்கொரு புலவன்,<br>நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா,<br>சிந்துக்குத் தந்தை. | காற்றே வா .....<br>மகரந்தத் தூளைச் ....<br>சக்தி குறைந்து போய்........ |
| | *(ii)* | முல்லைப்பாட்டு | நப்பூதனார் | முல்லைப்பாட்டு<br>(பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று)<br>**பாடப்பகுதி**: நல்லோர் விரிச்சி கேட்டல்.<br>**நிலம்**: முல்லை | ------ | 103 அடிகளைக் கொண்ட நூல்.<br>**பா வகை**: ஆசிரியப்பா | நனந்தலை உலகம்....<br>சிறுதாம்பு தொடுத்த.... |
| இயல் 3 | *(i)* | காசிக்காண்டம் | அதிவீரராம பாண்டியர்<br>**பட்டம் பெற்ற பெயர்** : சீவலமாறன் | காசிக்காண்டம்<br>(இல்லொழுக்கங் கூறிய பகுதி) | **வெற்றிவேற்கை** என்னும்<br>நறுந்தொகை, நைடதம்,<br>லிங்கபுராணம், வாயு சம்கிதை,<br>திருக்கருவை அந்தாதி,<br>கூர்ம புராணம். | துறவு, இல்லறம், பெண்களுக்குரிய<br>பண்புகள், வாழ்வியல் சொற்கள், மறு<br>வாழ்வில் அடையும் நன்மைகள் பற்றி<br>பாடும் நூல் காசிக்காண்டம். | விருந்தினனாக ஒருவன்.... |
| | *(ii)* | மலைபடுகடாம் | பெருங்கௌசிகனார் | மலைபடுகடாம் வேறுபெயர்:<br>**கூத்தராற்றுப்படை**<br>(பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று) | ------ | **நன்னன்** என்ற குறு நில மன்னன்<br>இந்நூலின் பாட்டுடைத் தலைவன்<br>(மலை - யானையாக உருவகம் செய்து<br>மலையில் உள்ள ஓசைகளை மதம்<br>என விளக்குவதால் '**மலைபடுகடாம்**'<br>எனப்பட்டது) | அன்று அவண் அசைஇ....<br>நும்இல் போல நில்லாது.... |





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**மெல்ல மலரும் மொட்டுகளுக்கான வழிமுறைகள்**

பாடலைப் படித்து மோனை, எதுகை கண்டறிதல் : **(சீர் - சொல், அடி - வரி)**

**வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்**
**பூவும் புகையும் மேவிய விரையும்**
**பகர்வனர் திரிதரு நகர வீதியும்**
**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்**

**மோனை**

**சீர்மோனை** : சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது சீர் மோனை.
**பூ**வும் **பு**கையும், **ப**ட்டினும் **ப**ருத்தி

**அடிமோனை** : அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது அடி மோனை.
**ப**கர்வனர் **ப**ட்டினும்

**எதுகை**

**சீர்எதுகை** : சீர் தோறும் இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது சீர் எதுகை.
வ**ண்**ணமும் சு**ண்**ணமும் த**ண்**நறுஞ்

**அடிஎதுகை** : அடி தோறும் இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது அடி எதுகை.
ப**ட்**டினும் க**ட்**டு

## இலக்கணக்குறிப்பு விளக்கம்

| | | |
|---|---|---|
| 1 | **பண்புத்தொகை** | பண்பை உணர்த்தும் 'மை' விகுதி மறைந்து வருவது பண்புத்தொகை.<br>மூதூர் - முது**மை** + ஊர், நன்மொழி - நன்**மை** + மொழி |
| 2 | **வினைத்தொகை** | முக்காலத்தையும் உணர்த்தி நிற்கும். வினை முன்னும் பெயர் பின்னும் வரும்.<br>உறுதுயர் - **உற்ற**துயர், **உறுகின்ற** துயர், **உறும்**துயர்<br>ஓடுநீர் - **ஓடிய**நீர், **ஓடுகின்ற** நீர், **ஓடும்** நீர் |
| 3 | **உவமைத்தொகை** | உவம உருபுகள் மறைந்து வந்தால் உவமைத்தொகை.<br>உவம உருபுகளுள் சில: **போல, போன்ற, அன்ன, போலும்**<br>தாமரை முகம் - தாமரை **போன்ற** முகம் |
| 4 | **உம்மைத்தொகை** | 'உம்' என்ற உருபு மறைந்து வருவது உம்மைத்தொகை.<br>இரவுபகல் - இர**வும்** பக**லும்**<br>காய்கனி - கா**யும்** கனி**யும்** |
| 5 | **வேற்றுமைத்தொகை** | வேற்றுமை உருபுகள் மறைந்து வந்து பொருள் தருவது வேற்றுமைத்தொகை. **(ஐ, ஆல், கு, இன், அது, கண்)**<br>மரம் வெட்டினான் - மரத்**தை** வெட்டினான் - **ஐ**<br>கை தொழுது - கை**யால்** தொழுது - **ஆல்**<br>(வேற்றுமை உருபுகளை வைத்து இரண்டாம் வேற்றுமைத்தொகை, மூன்றாம் வேற்றுமைத்தொகை எனக் கொள்க) |
| 6 | **வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை** | வேற்றுமை உருபு மட்டுமல்லாமல் அதன் பயனும் தொடருக்கிடையே மறைந்து வருவது.<br>மரப்பெட்டி – மரத்**தால்** ஆன பெட்டி<br>இதில் 'ஆல்' என்ற வேற்றுமை உருபும் 'ஆன' என்ற அதன் பயனும் வந்துள்ளதால் இது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை. (இவ்வாறே அனைத்து வேற்றுமைகளுக்கும் கொள்க) |





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பாடநூல் இலக்கணக் குறிப்புகள்

**இயல் - 2**

மூதூர் - பண்புத்தொகை
உறுதுயர் - வினைத்தொகை
கைதொழுது - மூன்றாம் வேற்றுமைத் தொகை
தடக்கை - உரிச்சொல் தொடர்

**இயல் - 3**

நன்மொழி - பண்புத்தொகை

வியத்தல், நோக்கல், எழுதுதல், உரைத்தல், செப்பல், இருத்தல், வழங்கல் - தொழிற்பெயர்கள்

அசைஇ, கெழீஇ - சொல்லிசை அளபெடை
பரூஉக் குறை, குரூஉக்கண் - செய்யுளிசை அளபெடை

**இயல் - 4**

ஊழ்ஊழ் - அடுக்குத்தொடர்
வளர்வானம் - வினைத்தொகை
செந்தீ - பண்புத்தொகை
வாரா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**இயல் - 5**

கேள்வியினான் - வினையாலணையும் பெயர்
காடனுக்கும், கபிலனுக்கும் - எண்ணும்மை

**இயல் - 6**

குண்டலமும், குழைகாதும் - எண்ணும்மை
ஆடுக - வியங்கோள் வினைமுற்று

**இயல் - 7**

வண்ணமும், சுண்ணமும் - எண்ணும்மை
பயில்தொழில் - வினைத்தொகை

**இயல் - 9**

காக்கென்று - காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம்
கணீர் - கண்ணீர் என்பதன் இடைக்குறை
காய்மணி, உய்முறை, செய்முறை - வினைத்தொகை
மெய்முறை - ஐந்தாம் வேற்றுமைத் தொகை
கைமுறை - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

## சொல்லும் பொருளும்

**இயல் - 1 இரட்டுற மொழிதல்**

துய்ப்பது - கற்பது, தருதல்
மேவலால் - பொருந்துதலால், பெறுதலால்

**இயல் - 2 i) காற்றே வா**

மயிலுறுத்து - மயங்கச்செய்
ப்ராண-ரஸம் - உயிர்வளி
லயத்துடன் - சீராக

**ii) முல்லைப்பாட்டு**

நனந்தலைஉலகம் - அகன்ற உலகம்
நேமி - சக்கரம்
கோடு - மலை
கொடுஞ்செலவு - விரைவாகச் செல்லுதல்
நறுவீ - நறுமணமுடைய மலர்கள்
தூஉய் - தூவி
விரிச்சி - நற்சொல்
சுவல் - தோள்

**இயல் - 3 i) காசிக்கண்டம்**

அருகுற - அருகில்
முகமன் - ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொற்கள்

**ii) மலைபடுகடாம்**

அசைஇ - இளைப்பாறி
கடும்பு - சுற்றம்
ஆரி - அருமை
வயிரியம் - கூத்தர்
இறடி - தினை
அல்கி - தங்கி
நரலும் - ஒலிக்கும்
படுகர் - பள்ளம்
வேவை - வெந்தது
பொம்மல் - சோறு
பாக்கம் - சிற்றூர்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இயல்-1 (i) அன்னை மொழியே

1. **அன்னை மொழியே, அழகார்ந்த செந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!**
**கன்னிக்குமரிக் கடல் கொண்ட நாட்டிடையில்**
**மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!**

1. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**
அ) கனிச்சாறு ஆ) கொய்யாக்கனி
இ) சிலப்பதிகாரம் ஈ) கம்பராமாயணம் **விடை: அ**

2. **இப்பாடல் ஆசிரியரின் பெயர் ........................**
அ) திருமூலர் ஆ) பாரதியார் இ) கம்பர் ஈ) பெருஞ்சித்திரனார் **விடை: ஈ**

3. **செந்தமிழ் - இலக்கணக்குறிப்பு தருக.**
அ) வினைத்தொகை ஆ) எண்ணும்மை
இ) பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை **விடை: இ**

4. **முன்னைக்கும் முன்னை பொருள் தருக.**
அ) கடமைக்கும் கடமை ஆ) உண்மைக்கும் உண்மை
இ) புதுமைக்கும் புதுமை ஈ) பழமைக்கும் பழமை **விடை: ஈ**

2. **தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!**
**இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!**
**மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!**

1. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**
அ) சிலப்பதிகாரம் ஆ) திருக்குறள்
இ) கனிச்சாறு ஈ) குண்டலகேசி **விடை: இ**

2. **இப்பாடலின் ஆசிரியர் யார்?**
அ) கம்பர் ஆ) பாரதியார்
இ) திரு.வி.க. ஈ) துரைமாணிக்கம் **விடை: ஈ**

3. **பாடலில் இடம் பெற்றுள்ள இரட்டைக்காப்பியங்கள் யாவை?**
அ) சிலப்பதிகாரம் குண்டலகேசி ஆ) சிலப்பதிகாரம் மணிமேகலை
இ) குண்டலகேசி மணிமேகலை ஈ) சீவகசிந்தாமணி குண்டலகேசி **விடை: ஆ**

4. **எண் தொகையே - பிரித்து எழுதுக.**
அ) எண் தொகையே ஆ) என் தொகையே
இ) எள் தொகையே ஈ) எட்டு தொகையே **விடை: ஈ**

(ii) இரட்டுற மொழிதல்

3. **முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்**
**மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்**
**அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு**
**இணைகிடந்த தேதமிழ் ஈண்டு**

1. **இப்பாடலின் ஆசிரியர் யார்?**
அ) கவிராயர் ஆ) அழகனார்
இ) தமிழழகனார் ஈ) பாவாணர் **விடை: இ**

2. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**
அ) தனிப்பாடல் திரட்டு ஆ) சங்கத்தமிழ்
இ) தொடர்நிலை ஈ) திருக்குறள் **விடை: அ**



• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பகுதி – II (9x2=18)

## பிரிவு – I(4x2=8)

### 4. விடைக்கேற்ற வினா அமைத்தல்

**மெல்ல மலரும் மொட்டுகளுக்கான வழிமுறைகள்**

1. மெல்ல மலரும் மொட்டுகள் விடைக்கேற்ற வினா எழுதும் பகுதியில் இறுதி எழுத்து மெய்யெழுத்தாக இருந்தால் அதில் உள்ள புள்ளியை நீக்கிவிட்டு துணைக்கால், வினாக்குறி போட்டால் வினா அமைந்துவிடும்.

    சென்றார் - சென்றா**ரா**?
    வேண்டும் - வேண்டு**மா**?
    சென்றாய் - சென்றா**யா**?
    வருவாள் - வருவா**ளா**?

2. உயிர்மெய் எழுத்தில் முடிந்தால் வா (அ) யா என்ற எழுத்துகளைச் சேர்க்க வேண்டும்.

    அடைந்தன – அடைந்தன**வா**?
    தேவை – தேவை**யா**?
    அடைந்தது – அடைந்தது**வா**?

    1. **ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.**
    ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கு**மா**?
    2. **1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.**
    1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது**வா**?

1. **தொல்காப்பியர் உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார்.**
உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது எனக் கூறியவர் யார்?
2. **காலப்போக்கில் வீட்டில் நடைபெற்ற விழாக்கள் திருமணக்கூடங்களுக்கு இடம்பெயர்ந்துவிட்டன.**
காலப்போக்கில் வீட்டில் நடைபெற்ற விழாக்கள் எங்கு இடம்பெயர்ந்துவிட்டன?
3. **இதழியலில், செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத்தகுந்த மாறுதல்களைச் செய்து வருகிறது.**
இதழியலில் குறிப்பிடத்தகுந்த மாறுதல்களைச் செய்து வருவது எது?
4. **பெரியார் அறிவியல் தொழில்நுட்பக்கழகம் 1988 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.**
பெரியார் அறிவியல் தொழில்நுட்பக்கழகம் எந்த ஆண்டு நிறுவப்பட்டது?
5. **மொழிபெயர்த்தல் என்னும் தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார்.**
மொழிபெயர்த்தல் என்னும் தொடரைத் தொல்காப்பியர் எந்த இயலில் குறிப்பிட்டுள்ளார்?
6. **போலச்செய்தல் பண்புகளை அடிப்படையாகக் கொண்டது பொய்க்கால் குதிரையாட்டம்.**
பொய்க்கால் குதிரையாட்டம் எந்தப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டது?
7. **புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கட மலையாகவும் தெற்கெல்லை குமரிமுனையாகவும் கூறப்பட்டுள்ளது.**
புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் தமிழகத்தின் வடக்கு, தெற்கு எல்லைகளாகக் கூறப்பட்டுள்ளன யாவை?
8. **பேரரசனது மெய்ப்புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி.**
பேரரசனது மெய்ப்புகழை எடுத்துக்கூறுவது எது?



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## 5. செய்யுள், உரைநடை குறுவினாக்கள்

**இயல் - 1** **(பா.நூ.ப.எண்.19,20)**

1. **"மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
   **முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"**
   **இவ்வடிகளில் - இடம்பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

   ➢ சீவக சிந்தாமணி
   ➢ வளையாபதி
   ➢ குண்டலகேசி

2. **ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.**
   **ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
   **ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**
   **மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.**

   **சரியான தொடர்கள்** : ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
   ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
   **பிழையான தொடர்** : ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
   **பிழைக்கான காரணம்** : ஒரு தாற்றில்தான் பலசீப்பு வாழைப்பழங்கள் இருக்கும்.

3. **தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**

   காலை நேரம் தொடர்வண்டியிலிருந்து கீழே இறங்கினார் கி.வா.ஜகந்நாதன். அவரை மாலையிட்டு வரவேற்றனர். அதற்கு அவர் "காலையிலேயே மாலையும் வந்துவிட்டது" என்றார்.
   மாலை – பொழுது, பூமாலை (சிலேடை நயம்)

**இயல் - 2** **(பா.நூ.ப.எண்.43,44)**

4. **'நமக்கு உயிர் காற்று**
   **காற்றுக்கு வரம் மரம் - மரங்களை**
   **வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' - இது போன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.**

   மலர்களில் புகுந்தால் மணமாகிறாய்!
   மனிதருள் புகுந்தால் விடமாகிறாய்!
   இயற்கையைக் காப்போம்!
   இனிய காற்றை சுவாசிப்போம்!

5. **வசன கவிதை - குறிப்பு வரைக.**

   உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வசன கவிதை எனப்படுகிறது. இது பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

6. **பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.**

   "தம்பி அழாதே! உன் பெற்றோர் வந்துவிடுவார்கள்.
   உனக்காகத் தானே வேலைக்குச் செல்கிறார்கள்.
   நீ கேட்டதை வாங்கித் தருவார்கள் என அன்போடு பேசுவேன்.

7. **மாஅல் பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.**

   மாஅல் பொருள் - திருமால் (பேருருவம் எடுத்த திருமால்)
   மாஅல் இலக்கணக்குறிப்பு - செய்யுளிசை அளபெடை





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**31. பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியிடுக.**

**பழங்காலத்திலேயே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் - ம.பொ.சி**

பழங்காலத்திலேயே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி, விடுதலைப்போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - ம.பொ.சி

**இயல் - 8** **(பா.நூ.ப.எண்.197,198)**

**32. 'கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!**
**உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'**
**அ. அடியெதுகையை எடுத்தெழுதுக.**
**ஆ. இலக்கணக்குறிப்பு எழுதுக. கொள்க, குரைக்க**

அ. அடியெதுகை
கொ**ள்**வோர்
உ**ள்**வாய்

ஆ. இலக்கணக் குறிப்பு
கொள்க, குரைக்க – வியங்கோள் வினைமுற்றுகள்

**33. குறிப்பு வரைக – அவையம்**

அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரியும் அறம் கூறும் மன்றங்கள் 'அவையம்' எனப்பட்டன. உறையூர் மதுரை போன்ற இடங்களில் அமைந்த அவையங்கள் சிறப்புப் பெற்றவை.

அறம் அறக்கண்ட நெறிமான் அவையம் - புறநானூறு

**34. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?**

காலம் மாறி வயது முதிர்ந்த பின்னும், இன்றும் வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத் தூரிகை கொண்டு தூய்மை செய்யும் அறப்பணியைக் கவிஞர் செய்கிறார்.

**இயல் - 9** **(பா.நூ.ப.எண். 223,224)**

**35. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு. இத்தொடரை இருதொடர்களாக்குக.**

- நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் உண்டு.
- நான் எழுதுவதற்கு உரிய காரணமும் உண்டு.

**36. காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன் - உவமை உணர்த்தும் கருத்து யாது?**

இளம்பயிர் நெல்மணியாய் மாறும் முன்னர் மழை இல்லாமல் வாடுவதைப் போல கருணையன் வளர்ந்து ஆளாகும் முன்னரே தாயை இழந்து வாடுகிறார்.

**37. 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?**

- பணம் பதவிகளால் '**வாழ்வில் தலைக்கனம்**' கொண்டவர் பலர்.
- தினமும் கல்சுமக்கும் சித்தாளுவின் வாழ்வையே '**தலைக்கனமே வாழ்வு**' என்கிறார் நாகூர் ரூமி.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## கூடுதல் வினாக்கள்

**இயல் - 1**

**1. தமிழ்ச்சொல் வளம் குறித்து கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.**

"தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமின்றி தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரிய சொற்களும் தமிழில் உள" என்கிறார் கால்டுவெல்.

**2. பன்மொழிப்புலவர் க.அப்பாதுரையார் குறித்து எழுதுக.**

உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா. அம்மாநாட்டுக்குரிய மொழியும் தமிழே என்பது பன்மொழிப்புலவர் க.அப்பாதுரையாரின் கருத்து.

**3. சிலேடை (அ) இரட்டுறமொழிதல் என்றால் என்ன?**

- இரண்டு உற மொழிதல் - இரட்டுறமொழிதல்.
- ஒரு செய்யுளை இரு பொருள்படப் பாடுவது.

**4. சிலேடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

சிலேடை இரண்டு வகைப்படும்.
செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை

**5. தமிழ்நாட்டில் மட்டும் விளையும் கூலங்களின் பெயர்களை எழுதுக.**

வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி.

**இயல் - 2**

**6. காற்றின் ஆற்றல், வேகம் இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றன ?**

**ஆற்றல்** - 'வளி மிகின் வலி இல்லை' (புறம் - ஐயூர் முடவனார்)
**வேகம்** - 'கடுங்காற்று மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது' (புறம் - இளநாகனார்)

**7. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?**

முல்லை - வரகு, சாமை
மருதம் - செந்நெல், வெண்ணெல்

**8. முல்லைப்பாட்டு நூல்குறிப்பு வரைக.**

- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று முல்லைப்பாட்டு.
- இது 103 அடிகளைக் கொண்டது.
- இயற்றியவர் - நப்பூதனார்.
- இது ஆசிரியப்பாவில் இயற்றப்பட்டது.
- முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது.

**9. ஓசோன் படலத்தின் பயன்களைக் கூறுக.**

- கதிரவனிடமிருந்து வரும் புறஊதாக் கதிர்களைத் தடுக்கிறது.
- கதிரவனின் வெப்பத்தைக் குறைத்துக் கொடுக்கிறது.

**10. முதுபெண்டிர் விரிச்சி கேட்டு தலைவிக்குக் கூறிய செய்தி யாது?**

- நற்சொல்லை நாங்கள் கேட்டோம்.
- தலைவன் பகைவரை வென்று திரைப்பொருளோடு வருவது உறுதி.
- மனத்தடுமாற்றம் கொள்ளாதே.

**11. வீசுகின்ற திசையைப் பொருத்து காற்றின் பெயர்களை எழுதுக.**

கிழக்கு – கொண்டல், மேற்கு – கோடை, வடக்கு – வாடை, தெற்கு – தென்றல்

**12. குளோரோ புளோரோ கார்பனால் ஓசோன் படலம் எவ்வாறு பாதிக்கப்படுகிறது.?**

- குளிர்பதனப் பெட்டி முதலிய இயந்திரங்களில் இருந்து வெளிவரும் குளோரோ புளோரோ கார்பன் ஓசோன் படலத்தை ஓட்டையிடுகின்றது.
- இதனால் புறஊதாக்கதிர்கள் நேரடியாக உயிரினங்களைத் தாக்குகின்றன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இயல் - 9

**45. தேம்பாவணி பெயர்க்காரணம் தருக.**

- தேம்பா அணி – வாடாத மாலை
- தேன் பா அணி – தேன் போன்ற இனிய பாடல்களால் ஆன மாலை.

**46. வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் யாவை ?**

தேம்பாவணி, சதுரகராதி, தொன்னூல் விளக்கம், சிற்றிலக்கியங்கள், பரமார்த்தக் குரு கதை, உரைநடை நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள்.

## பிரிவு –II (5x2=10)

### 6. இலக்கண வினாக்கள்

இயல் - 1 (பா.நூ.ப.எண்.19-20)

**1. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.**

வேம் கை (தொடர்மொழி) - வேகின்ற கை (இரு சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் தருகிறது)
வேங்கை (பொதுமொழி) - வேங்கை மரம் (தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாக வருகிறது)

**2. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்" - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச்சுட்டி அதன் இலக்கணம் தருக.**

**அளபெடை வகை :**

உடுப்பதூஉம், உண்பதூஉம் - இன்னிசை அளபெடை.

**இலக்கணம் :**

செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் இனிய ஓசைக்காக உயிரெழுத்துகள் நீண்டு ஒலிப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

இயல் - 2 (பா.நூ.ப.எண்.44)

**3. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத்தொடர்களை விரித்து எழுதுக ; தொடரில் அமைக்க.**

**தண்ணீர் குடி** - (தண்ணீரைக் குடி) - இரண்டாம் வேற்றுமைத் தொகை
அவன் தண்ணீர் குடித்தான்.

**தயிர்க்குடம்** - (தயிரை உடைய குடம்) - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை. அவன் தயிர்க்குடத்தை எடுத்தான்.

இயல் - 3 (பா.நூ.ப.எண்.65)

**4. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது' என்றாள் என அடுக்குத் தொடரானது. 'சிரித்து பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?**

'சிரித்து பேசினார்' என்பது மகிழ்ச்சி காரணமாக, 'சிரித்து சிரித்துப் பேசினார்' என அடுக்குத்தொடராகும்.

**5. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார். அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?**

பாரதியார் கவிஞர் - பெயர்ப் பயனிலை
நூலகம் சென்றார் - வினைப் பயனிலை
அவர் யார்? - வினாப் பயனிலை

இயல் - 4 (பா.நூ.ப.எண்.93)

**6. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன். இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?**

செல்கிறேன் - நிகழ்காலம்; செல்வேன் - எதிர்காலம்
உறுதித்தன்மையை நோக்கி கால வழுவமைதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இயல் - 8 (பா.நூ.ப.எண்.197)

**14. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.**

- வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, இரண்டு அடிகளைக் கொண்டதாய் வரும்.
- முதலடி அளவடியாகவும் இரண்டாம் அடி சிந்தடியாகவும் வரும்.

(எ.கா) குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

**15. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. - இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.**

வஞ்சிப்பாவிற்குத் தூங்கல் ஓசையும் கலிப்பாவிற்குத் துள்ளல் ஓசையும் உரியது.

**16. வெண்பா, ஆசிரியப்பாவிற்குரிய ஓசைகளை எழுதுக.**

வெண்பா – செப்பலோசை, ஆசிரியப்பா – அகவலோசை.

இயல் - 9 (பா.நூ.ப.எண்.223)

**17. தீவக அணியின் வகைகள் யாவை ?**

தீவக அணி மூன்று வகைப்படும். அவை,

1.முதல்நிலைத் தீவகம் 2. இடைநிலைத் தீவகம் 3. கடைநிலைத் தீவகம்

**18. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?**

இக்குறளில் பயின்று வந்துள்ள அணி நிரல்நிறை அணி. சொல்லையும் பொருளையும் நேரே நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி.

## 7. கற்பவை கற்றபின், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு

இயல் - 1 (பா.நூ.ப.எண்.18-23)

**1. சந்தக் கவிதையில் உள்ள பிழைகளைத் திருத்துக.**

| பிழை | பிழை திருத்தம்: |
| --- | --- |
| “தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை | தே**னி**லே ஊ**றி**ய செந்தமிழின் - சுவை |
| தேரும் சிலப்பதி காறமதை | தே**று**ம் சிலப்பதி கா**ர**மதை |
| ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம் | ஊனிலே எம்முயிர் உ**ள்ளள**வும் - நிதம் |
| ஓதி யுனர்ந்தின் புருவோமே” | ஓதி யு**ண**ர்ந்தின் பு**று**வோமே. |

**2. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களை எழுதுக. (கல், பழம், புல், ஆடு)**

கல் - குவியல் பழம் - குலை
புல் - கட்டு ஆடு - மந்தை

**3. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

**1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.**
கலையரங்கத்தில் எனக்காகக் **காத்திருக்கிறவரை** அழைத்து வாருங்கள்.

**2. ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.**
ஊட்டமிகு உணவு **உண்டவர்** நீண்ட வாழ்நாள் பெற்றார்.

**3. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.**
நேற்று என்னைச் **சந்தித்தவர்** என் நண்பர்.

**4. பொதுஅறிவு நூல்களைத் தேடிப்படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.**
பொதுஅறிவு நூல்களைத் **தேடிப்படித்தவர்** போட்டித் தேர்வில் வென்றார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**26. குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக. (குறிப்பு – எதிர்மறைச் சொற்கள்)**

1. மீளாத் துயர் - மீளும் துயர்
2. கொடுத்துச் சிவந்த - வாங்கிச் சிவந்த
3. மறைத்துக் காட்டு - வெளிப்படையாகக் காட்டு
4. அருகில் அமர்க - தொலைவில் அமர்க
5. பார்த்த படம் - பார்க்காத படம்
6. எழுதாக் கவிதை - எழுதிய கவிதை

**இயல் - 5** **(பா.நூ.ப.எண்.120-125)**

**27. வினா வகையையும் விடை வகையையும் சுட்டுக.**

**1. அ. "காமராசர் நகர் எங்கே இருக்கிறது?" "இந்த வழியாகச் செல்லுங்கள்" என்று விடையளிப்பது.**

காமராசர் நகர் எங்கே இருக்கிறது? – அறியா வினா
இந்த வழியாகச் செல்லுங்கள் – சுட்டு விடை

**ஆ. "எனக்கு எழுதித் தருகிறாயா?" என்ற வினாவுக்கு, "எனக்கு யார் எழுதித் தருவார்கள்?" என்று விடையளிப்பது.**

எனக்கு எழுதித் தருகிறாயா? – அறியா வினா
எனக்கு யார் எழுதித் தருவார்கள்? – வினாஎதிர் வினாதல் விடை

**2. உரையாடலில் இடம்பெற்றுள்ள வினாவிடை வகைகளைக் கண்டு எழுதுக.**

பாமகள் : வணக்கம் ஆதிரை! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே? **(அறியாவினா)**
ஆதிரை : ஆமாம்! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன். **(நேர் விடை)**
பாமகள் : அப்படியா! என்ன தலைப்பு? **(அறியா வினா)**
ஆதிரை : கல்வியில் சிறக்கும் தமிழர்! **(நேர் விடை)**
நீங்கள் கவியரங்கத்திற்கு எல்லாம் வருவீர்களோ? மாட்டீர்களோ ? **(ஐயவினா)**
பாமகள் : ஏன் வராமல்? **(வினாஎதிர் வினாதல் விடை)**

**28. அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.**

| தொடர்வகை | வேர்ச்சொற்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | ஓடு | சொல் | தா | பார் | வா |
| **எழுவாய்த்தொடர்** | அருணா ஓடினாள் | அம்மா சொன்னார் | **அரசர் தந்தார்** | துளிர் பார்த்தாள் | குழந்தை வந்தது |
| **பெயரெச்சத்தொடர்** | ஓடிய அருணா | **சொன்ன அம்மா** | தந்த அரசர் | **பார்த்த துளிர்** | வந்த குழந்தை |
| **வினையெச்சத்தொடர்** | ஓடிச் சென்றாள் | சொல்லிச் சென்றார் | தந்து சென்றார் | பார்த்துச் சிரித்தாள் | **வந்து சென்றது** |
| **விளித்தொடர்** | அருணா ஓடாதே! | **அம்மா சொல்லுங்கள்!** | அரசே தருக! | **துளிரே! இங்கு பார்!** | குழந்தையே வா! |
| **வேற்றுமைத்தொடர்** | அருணாவிற்காக ஓடினாள் | கதையைச் சொன்னார் | **அரசருக்குத் தந்தார்** | துளிருடன் பார்த்தேன் | **குழந்தையோடு வந்தேன்** |

**29. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

➢ **கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.** அழகிய குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

1. **மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.**
   நிழல் தரும் பெரிய மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
2. **வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.**
   இன்பமும் துன்பமும் கலந்த வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
3. **கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.**
   மாசற கற்ற கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
4. **குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.**
   ஆர்வமுள்ள குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2.) கீழ்க்காணும் நாள்காட்டியில் புதன்கிழமையை ஒன்றாம் தேதியாகக் கொண்டு தமிழெண்களால் நிரப்புக.

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | க | உ | ௩ | ௪ |
| ரு | ௬ | எ | அ | கூ | க0 | கக |
| கஉ | க௩ | க௪ | கரு | க௬ | கஎ | கஅ |
| ககூ | உ0 | உக | உஉ | உ௩ | உ௪ | உரு |
| உ௬ | உஎ | உஅ | உகூ | ௩0 | ௩1 | |

## 8. கலைச்சொற்களைத் தமிழாக்கம் செய்தல்

**இயல் - 1**

1. Vowel - உயிரெழுத்து
2. Consonant - மெய்யெழுத்து
3. Homograph - ஒப்பெழுத்து
4. Monolingual - ஒருமொழி
5. Conversation - உரையாடல்
6. Discussion - கலந்துரையாடல்

**இயல் - 2**

7. Storm - புயல்
8. Tornado - சூறாவளி
9. Tempest - பெருங்காற்று
10. Land breeze - நிலக்காற்று
11. Sea breeze - கடற்காற்று
12. Whirlwind - சுழல்காற்று

**இயல் - 3**

13. Classical literature - செவ்விலக்கியம்
14. Epic literature - காப்பிய இலக்கியம்
15. Devotional literature - பக்தி இலக்கியம்
16. Ancient literature - பண்டைய இலக்கியம்
17. Regional literature - வட்டார இலக்கியம்
18. Folk literature - நாட்டுப்புற இலக்கியம்
19. Modern literature - நவீன இலக்கியம்

**இயல் - 4**

20. Nano technology - மீநுண் தொழில்நுட்பம்
21. Bio technology - உயிரி தொழில்நுட்பம்
22. Space technology - விண்வெளித் தொழில்நுட்பம்
23. Cosmic rays - விண்வெளிக் கதிர்கள்
24. Ultraviolet rays - புறஊதாக் கதிர்கள்
25. Infrared rays - அகச்சிவப்புக் கதிர்கள்

**இயல் - 5**

26. Emblem - சின்னம்
27. Thesis - ஆய்வேடு
28. Intellectual - அறிவாளர்
29. Symbolism - குறியீட்டியல்

**இயல் - 6**

30. Aesthetics - அழகியல், முருகியல்
31. Artifacts - கலைப்படைப்புகள்
32. Terminology - கலைச்சொல்
33. Myth - தொன்மம்

**இயல் - 7**

34. Consulate - துணைத்தூதரகம்
35. Patent - காப்புரிமை
36. Document - ஆவணம்
37. Guild - வணிகக்குழு
38. Irrigation - பாசனம்
39. Territory - நிலப்பகுதி

**இயல் - 8**

40. Belief - நம்பிக்கை
41. Renaissance - மறுமலர்ச்சி
42. Philosopher - மெய்யியலாளர்
43. Revivalism - மீட்டுருவாக்கம்

**இயல் - 9**

44. Humanism - மனிதநேயம்
45. Cabinet - அமைச்சரவை
46. Cultural boundaries - பண்பாட்டு எல்லை
47. Cultural values - பண்பாட்டு விழுமியங்கள்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## 9. அகராதியில் பொருள் காணுதல்

### இயல் - 1

1. அடவி - காடு, சோலை
2. அவல் - பள்ளம், விளைநிலம்
3. சுவல் - மேடு, தோள்
4. செறு - வயல, பாத்தி
5. பழனம் - மருதநிலம், வயல்
6. புறவு - காடு, முல்லை நிலம்

### இயல் - 2

7. அகன்சுடர் - அகன்ற தீபம்
8. ஆர்கலி - கடல், மழை
9. கட்புள் - விழித்திருக்கும் பறவை
10. கொடுவாய் - பழிச்சொல், வாளின் வளைந்த வாய்
11. திருவில் - வானவில்

### இயல் - 3

12. ஊண் - உணவு; ஊன் - தசை, உடம்பு
13. திணை - ஒழுக்கம்; தினை - சிறுதானிய வகை
14. அண்ணம் - மேல்வாய்; அன்னம் - சோறு, பறவை
15. வெல்லம் - கரும்பின் (சாற்றின்) கட்டி; வெள்ளம் - நீர்ப்பெருக்கு

### இயல் - 4

16. அவிர்தல் - ஒளிர்தல் , பீறுதல்
17. அழல் - நெருப்பு, வெப்பம்
18. உவா - முழுமதி நாள், கடல்
19. கங்குல் - இரவு, இருள்
20. கனலி - சூரியன், நெருப்பு

### இயல் - 5

21. மன்றல் - திருமணம், நீண்டதெரு
22. அடிச்சுவடு - காலடிச்சுவடு
23. அகராதி - சொற்கோவை
24. தூவல் - மழை, எழுதும் இறகு
25. மருள் - மயக்கம், வியப்பு

### இயல் - 6

26. தால் - நாக்கு
27. உழுவை - புலி
28. அகவுதல் - குரல் எழுப்புதல்
29. ஏந்தெழில் - மிகுந்த அழகு
30. அணிமை - அண்மை, பக்கம்

### இயல் - 7

31. மிரியல் - மிளகு
32. வருத்தனை - தொழில் , பிழைப்பு
33. அதசி - சணல்
34. துரிஞ்சில் - வௌவால் வகை

### இயல் - 8

35. ஆசுகவி - கொடுத்தப் பொருளைப் பற்றி உடனே பாடும் பாட்டு
36. மதுரகவி - சொற்சுவை, பொருட்சுவை நிரம்பிய பாட்டு
37. சித்திரகவி - சித்திரத்தில் அமைப்பதற்கேற்ப பாடும் பாட்டு
38. வித்தாரகவி - விரித்துப் பாடும் பாட்டு

### இயல் - 9

39. குணதரன் - நற்குணம் உள்ளவன்
40. செவ்வை - நேர்மை, மிகுதி
41. நகல் - சிரிப்பு, ஏளனம்
42. பூட்கை - கொள்கை, மனவுறுதி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## 10. பகுபத உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| பகுதி (முதனிலை) | சொல்லின் முதலில் நிற்கும்; பகாப்பதமாக அமையும்; வினைச்சொல்லின் ஏவலாகவும் பெயர்ச் சொல்லில் அறுசுவைப் பெயராகவும் அமையும். |
| விகுதி (இறுதிநிலை) | சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டுவதாகவும் அமையும். |
| இடைநிலை | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும். |
| சந்தி | பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். |
| சாரியை | பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். |
| விகாரம் | தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம். |

| | |
|---|---|
| அன், ஆன் | ஆண்பால் வினைமுற்று விகுதி |
| அள், ஆள் | பெண்பால் வினைமுற்று விகுதி |
| அர், ஆர் | பலர்பால் வினைமுற்று விகுதி |
| து, று | படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதி |
| அ, ஆ | பலவின்பால் வினைமுற்று விகுதி |
| என், ஏன் | தன்மை ஒருமை வினைமுற்று விகுதி |
| அம், ஆம், எம், ஏம், ஓம் | தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி |
| ஐ, ஆய், இ | முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி |
| இர்,ஈர் | முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி |
| அ, உம் | பெயரெச்ச விகுதி |
| உ, இ | வினையெச்ச விகுதி |
| க, இய, இயர் | வியங்கோள் வினைமுற்று விகுதி |
| தல், அல், ஐ, கை, சி, பு... | தொழிற்பெயர் விகுதி |

**இயல் - 2**

1. பொறித்த - பொறி+த்+த்+அ
   - பொறி - பகுதி
   - த் - சந்தி
   - த் - இறந்தகால இடைநிலை
   - அ - பெயரெச்ச விகுதி

3. பொழிந்த - பொழி+த்(ந்)+த்+அ
   - பொழி - பகுதி
   - ந் - சந்தி
   - த - விகாரம்
   - த் - இறந்தகால இடைநிலை
   - அ - பெயரெச்ச விகுதி

**இயல் - 3**

2. உரைத்த - உரை+த்+த்+அ
   - உரை - பகுதி
   - - சந்தி
   - - இறந்தகால இடைநிலை
   - - பெயரெச்ச விகுதி

4. வருக - வா(வரு)+க
   - வா - பகுதி (வரு எனத் திரிந்தது விகாரம்
   - க - வியங்கோள் வினைமுற்று விகுதி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. மலைந்து - மலை+த்(ந்)+த்+உ
மலை - பகுதி
த் - சந்தி
ந் - விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**இயல் - 4**

4. கிளர்ந்த - கிளர+த்(ந்)+த்+அ
கிளர் - பகுதி
த் - சந்தி
ந் - விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**இயல் - 5**

7. தணிந்தது - தணி+த்(ந்)+த்+அ+து
தணி - பகுதி
த் - சந்தி
ந் - விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - சாரியை
து - படர்க்கை வினைமுற்று விகுதி

**இயல் - 6**

8. பதிந்து - பதி+த்(ந்)+த்+உ
பதி - பகுதி
த் - சந்தி
ந் - விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**இயல் - 7**

9. மயங்கிய - மயங்கு+இன்+ய்+அ
மயங்கு - பகுதி
இன் - இறந்தகால இடைநிலை
ய் - உடம்படுமெய் சந்தி
அ - பெயரெச்ச விகுதி

**இயல் - 9**

10. ஒலித்து - ஒலி+த்+த்+உ
ஒலி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

11. அறியேன் - அறி+ய்+ஆ+ஏன்
அறி - பகுதி
ய் - உடம்படுமெய் சந்தி
ஆ - எதிர்மறை இடைநிலை
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

12. வாழ்க - வாழ்+க
வாழ் - பகுதி
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

## கூடுதல் வினாக்கள்
### இயல் - 1

**1. கூட்டப்பெயர்களை எழுதுக.**

| | | |
|---|---|---|
| சாவி - கொத்து | எறும்பு - சாரை | மக்கள் - கூட்டம் |
| யானை - கூட்டம் | வாழை - தோட்டம் | கீரை - கட்டு |
| மாமரம் - தோப்பு | வாழைப்பழம் - தார் | தென்னை - தோப்பு |

**2. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றுக.**

| வினைமுற்று - வினையாலணையும் பெயர் | வினைமுற்று - வினையாலணையும் பெயர் |
|---|---|
| கண்டார் - கண்டவர் | ஓடிச் சென்றார் - ஓடிச் சென்றவர் |
| பார்த்தாள் - பார்த்தவள் | எழுதிச் சென்றார் - எழுதிச் சென்றவர் |
| நேசித்தான் - நேசித்தவன் | கண்டு களித்தான் - கண்டு களித்தவன் |
| கூறினார் - கூறியவர் | நடந்து பார்த்தான் - நடந்து பார்த்தவன் |
| வியந்தார் - வியந்தவர் | தேடிக் கண்டாள் - தேடிக் கண்டவள் |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



12. **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிகும்.**

| | | |
|---|---|---|
| காணா | + கண்கள் | = காணாக் கண்கள் |
| கேளா | + செவி | = கேளாச்செவி |
| ஓடா | + தேர் | = ஓடாத்தேர் |
| நாறா | + பூ | = நாறாப்பூ |

**ஆ) வல்லினம் மிகா இடங்கள்**

1. **வினைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது.**

| | | |
|---|---|---|
| விடு | + கணை | = விடுகணை |
| விரி | + சுடர் | = விரிசுடர் |
| தோய் | + தயிர் | = தோய்தயிர் |
| பாய் | + புலி | = பாய்புலி |

2. **உம்மைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது.**

| | | |
|---|---|---|
| காய் | + கனி | = காய்கனி |
| தாய் | + தந்தை | = தாய்தந்தை |
| முத்து | + பவளம் | = முத்துபவளம் |

3. **இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது.**

| | | |
|---|---|---|
| கதை | + சொன்னார் | = கதை சொன்னார் |
| கடல் | + தாவினான் | = கடல் தாவினான் |
| புகழ் | + பெற்றார் | = புகழ் பெற்றார் |

4. **வியங்கோள் வினைமுற்றை அடுத்து வரும் வல்லினம் மிகாது.**

| | | |
|---|---|---|
| கற்க | + கசடற | = கற்க கசடற |
| வளர்க | + சிந்தனை | = வளர்க சிந்தனை |
| வாழ்க | + தமிழ் | = வாழ்க தமிழ் |
| காண்க | + படம் | = காண்க படம் |

5. **விளித்தொடரை அடுத்து வரும் வல்லினம் மிகாது.**

| | | |
|---|---|---|
| முருகா | + கேள் | = முருகா கேள் |
| கண்ணா | + சொல் | = கண்ணா சொல் |
| கிளியே | + தா | = கிளியே தா |
| அண்ணா | + போ | = அண்ணா போ |

6. **இரட்டைக்கிளவியில் வல்லினம் மிகாது.**

கடகட, தடதட, சடசட, படபட

7. **அவை, இவை என்னும் சுட்டுச்சொற்கள் எவை என்னும் வினாச்சொல் ஆகியவற்றை அடுத்து வரும் வல்லினம் மிகாது.**

| | | |
|---|---|---|
| அவை | + பறவைகள் | = அவை பறவைகள் |
| இவை | + சட்டைகள் | = இவை சட்டைகள் |
| அவை | + தடங்கள் | = அவை தடங்கள் |
| எவை | + படங்கள் | = எவை படங்கள் |

8. **அது, எது எனும் சுட்டுச்சொற்களை அடுத்து வரும் வல்லினம் மிகாது.**

| | | |
|---|---|---|
| அது | + கூடை | = அது கூடை |
| இது | + சட்டி | = இது சட்டி |
| அது | + தோணி | = அது தோணி |
| இது | + பாடம் | = இது பாடம் |

9. **பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர் (படித்து என்பது போல் வன்றொடர்க் குற்றியலுகரச்சொல் அல்லாதவை) ஆகியவற்றை அடுத்து வரும் வல்லினம் மிகாது.**

| | | |
|---|---|---|
| வந்த | + கயல்விழி | = வந்த கயல்விழி |
| தைத்த | + சட்டை | = தைத்த சட்டை |
| வந்து | + தந்தான் | = வந்து தந்தான் |
| செய்து | + பார்த்தான் | = செய்து பார்த்தான் |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



23. கருப்பொருள் அட்டவணை

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல், ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழவன், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| உணவு | மலைநெல், தினை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெல் | மீன், உப்புக்குப் பெற்றபொருள் | சூறையாடலால் வரும் பொருள் |
| விலங்கு | புலி,கரடி, சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| பூ | குறிஞ்சி, காந்தள் | முல்லை, தோன்றி | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம்,பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |
| பறவை | கிளி, மயில் | காட்டுக்கோழி, மயில், | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| நீர் | அருவி நீர், சுனை நீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற்கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை,கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறு கோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன் கோட்பாறை | துடி |
| பண் | குறிஞ்சிப்பண் | முல்லைப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், களை பறித்தல் | மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி,நிரை கவர்தல் |

## இயல் - 7

24. தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி தமிழ் எண்ணுரு தருக.

| | | | | |
|---|---|---|---|---|
| தசாவதாரம் | - தசம் (பத்து) | • • அவதாரம் | - | க0 |
| சாதவதானி | - சதம் (நூறு) | • • அவதானி | - | க00 |
| ஒன்பான் சுவை | - ஒன்பது | • • சுவை | - | கூ |
| அஷ்டதிக்கஜங்கள் | - அஷ்டம் (எட்டு) | • • கஜங்கள் | - | அ |



• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பகுதி – III (6x3=18)

## பிரிவு – I (2x3=6)

## 11. உரைநடை சிறுவினாக்கள்

இயல் - I (பா.நூ.ப.எண்.20)

**1. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'**
**இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.**

1. நாற்று - நெல் **நாற்று** நட்டேன்.
2. கன்று - வாழைக்கன்று வளமாக இருந்தது.
3. பிள்ளை - தென்னம்**பிள்ளை**யைத் தெற்கில் வைத்தேன்.
4. வடலி - பனை **வடலி**யைப் பாங்காக வளர்த்தேன்.
5. பைங்கூழ் - **பைங்கூழ்** பசுமையாக இருந்தது.

இயல் - 2 (பா.நூ.ப.எண்.44)

**2. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்.... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு நீர்தன்னைப் பற்றிப் பேசினால்.... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக. (அல்லது) நீர் தன்னைப் பற்றிப் பேசினால்... உங்கள் கற்பனையில் ஆறு தலைப்புகள் தருக.**

1. முகில் நீரே உயிர்நீர்
2. பல பெயர்களில் நான்
3. திருக்குறளில் என்சிறப்பு வான்சிறப்பு
4. சிவனின் சிகையிலே... நான்
5. குமரியைக் கொன்ற கொடியன் (குமரிக்கண்டம்)
6. எதிர்காலத்தில் என் நிலை

**3. சோலைக்காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.**

**சோலைக்காற்று** : நண்பா, எப்படி இருக்கிறாய்?

**மின்விசிறிக் காற்று** : பிறர் கட்டுப்பாட்டில் இருக்கும் நான் எப்படி நலமாக இருக்க முடியும்?

**சோலைக்காற்று** : இன்றைய நவீன உலகில் நீ இல்லாமல் யாராலும் இருக்க முடியாது, கவலை வேண்டாம்.

**மின்விசிறிக்காற்று** : பிறருக்கு உதவுவதில் மகிழ்ச்சியே, ஆனால் இயற்கையை தடுத்தல்லவா என்வேலையைச் செய்து கொண்டிருக்கிறேன்.

**சோலைக்காற்று** : நீ என்ன செய்வாய்? அடுக்குமாடிக் கட்டிடங்களும் காற்றுச் சீரமைப்பி உள்ள அறைகளும் மனிதர்களின் செயலல்லவா?

**மின்விசிறிக்காற்று** : ஆமாம், என்னால் இயற்கைக்குப் பாதிப்பில்லை இருந்தாலும் உன்னைப் போல் பூக்களில் உலவி, நீரில் நீந்தி, வானத்தைத் தொட்டு வசந்தம் காட்ட ஆசை தான். ஆனால் மின்சாரம் இல்லாமல் என்னால் இயங்கக்கூடஇயலாது.

**சோலைக்காற்று** : நண்பா, உன் கடமையை – நீ செய்கிறாய். கிடைக்கின்ற வாழ்க்கையை விரும்பி ஏற்றுக்கொள். நான் வருகிறேன்!



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## 12. உரைப்பத்தியைப் படித்துப் வினாக்களுக்கு விடையளித்தல்

1. **தன்வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்க்கே விருந்தினர் என்று பெயர். அதனால் தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.**

**அ) விருந்தினர் என்போர் யாவர்?**
**ஆ) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?**
**இ) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.**

**விடைகள்:**

அ) முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.
ஆ) 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.
இ) விருந்தோம்பல்

2. **தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச்சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது இன்றைய தொழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.**

**அ) திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் எவை?**
**ஆ) திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது?**
**இ) உயர்வகைத் திறன்பேசிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது?**

**விடைகள்:**

அ) கடவுச்சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது.
ஆ) திறன்பேசியில் செயற்கை நுண்ணறிவு படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.
இ) உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக்கருவி செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது.

3. **மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார். மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக்குறிப்பு, சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது. வடமொழியில் வழங்கி வந்த இராமாயண, மகாபாரதத் தொன்மச் செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம்பெற்றுள்ளன.**

**அ) சின்னமனூர்ச் செப்பேடு குறிப்பிடும் செய்தி யாது?**
**ஆ) சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள தொன்மச்செய்திகள் யாவை?**
**இ) மொழிபெயர்த்தல் என்ற தொடர் இடம்பெற்றுள்ள நூல் எது?**

**விடைகள்:**

அ) மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக்குறிப்பு, சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது.
ஆ) வடமொழிகளில் வழங்கி வந்த இராமாயண, மகாபாரதத் தொன்மச் செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம்பெற்றுள்ளன.
இ) தொல்காப்பியம்.

4. **அம்மானைப் பாடல்கள், சித்தர் பாடல்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலமாக நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக் கொள்வேன். யான் முறையாக ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலேயே மிகுந்த ஆர்வம் காட்டினேன். எனது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமை திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே மிகுந்த பங்குண்டு என்று தமது செவிச்செல்வம் பற்றி ம.பொ.சிவஞானம் குறிப்பிட்டுள்ளார்.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**அ) ம.பொ.சி.அவர்கள் கேள்வி ஞானத்தை அதிகமாக யாரிடம் பெற்றதாகக் குறிப்பிடுகிறார்?**

**ஆ) ம.பொ.சி. அவர்கள் இலக்கிய அறிவினை எவ்வாறு பெற்றார்?**

**இ) ஏட்டுக்கல்வி பெற இயலாத ம.பொ.சி. அதனை எவ்வாறு ஈடு செய்தார்?**

**விடைகள்:**

அ) ம.பொ.சி. அவர்கள் தனது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமை திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே அதிகம் உண்டு எனக்கூறியுள்ளார்.

ஆ) அம்மானைப் பாடல்கள், சித்தர் பாடல்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலமாக ம.பொ.சி அவர்கள் இலக்கிய அறிவு பெற்றார்.

இ) ஏட்டுக்கல்வி பெற இயலாத ம.பொ.சி. அதனை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலேயே மிகுந்த ஆர்வம் காட்டினார்.

5. **தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.**

**அ) போர் அறம் என்பது எவற்றைக் குறிக்கிறது?**

**ஆ) ஆவூர் மூலங்கிழார் போர் அறம் குறித்துக் குறிப்பிடுவது யாது?**

**இ) போரில் யாருக்கெல்லாம் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன?**

**விடைகள்:**

அ) போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.

ஆ) தம்மைவிட வலிமை குறைந்தவரோடு போர்செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

இ) பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

## பிரிவு – II 2x3=6

## 13. செய்யுள் சிறுவினாக்கள்

**இயல் - 1** **(பா.நூ.ப.எண்.20)**

1. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?**

**மொழிச்சிறப்பு:-**

- செம்மை பெற்ற தமிழ்மொழி, அன்னை மொழியாகவும்,
- பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியாகவும்,
- குமரிக்கண்டத்தில் நிலைத்து ஆட்சிசெய்த மண்ணுலகப் பேரரசாகவும் விளங்குகிறது.

**இலக்கியச் சிறப்பு:-**

- பாண்டிய மன்னனின் மகளாகவும்,
- திருக்குறளின் பெருமைக்குரியவளாகவும்
- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியச் சிறப்புக்கு உரியவளாகவும் திகழ்கிறாள். ஆகவே, தமிழன்னையைப் பாவலரேறு வாழ்த்துகிறார்.





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இயல் - 2 (பா.நூ.ப.எண்.44)

2. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்த்தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். - இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

| தொகைச்சொற்கள் | வகை | விரி |
|---|---|---|
| **மல்லிகைப்பூ** | இருபெயரொட்டுப் பண்புத்தொகை | மல்லிகை - சிறப்புப்பெயர்,<br>பூ - பொதுப்பெயர் |
| **பூங்கொடி** | உவமைத்தொகை | பூ போன்ற கொடி |
| **ஆடுமாடு** | உம்மைத்தொகை | ஆடும் மாடும் |
| **தண்ணீர்த்தொட்டி** | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை | தண்ணீரை உடைய தொட்டி |
| **குடிநீர்** | வினைத்தொகை | குடித்தநீர், குடிக்கின்ற நீர், குடிக்கும் நீர் |
| **சுவர்க்கடிகாரம்** | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை | சுவரின்கண் உள்ள கடிகாரம் |
| **மணி பார்த்தாள்** | (இரண்டாம்) வேற்றுமைத்தொகை | மணியைப் பார்த்தாள் |

இயல் - 3 (பா.நூ.ப.எண்.66)

3. கண்ணே கண்ணுறங்கு,
காலையில் நீயெழும்பு,
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு,
பாடினேன் தாலாட்டு,
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு! - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

| தொடர்கள் | தொடர் வகைகள் |
|---|---|
| **கண்ணே** கண்ணுறங்கு | விளித்தொடர் |
| **காலையில்** நீயெழும்பு | வேற்றுமைத்தொகாநிலைத்தொடர் |
| **மாமழை** பெய்கையிலே | உரிச்சொற்றொடர் |
| **மாம்பூவே** கண்ணுறங்கு | விளித்தொடர் |
| **பாடினேன்** தாலாட்டு | வினைமுற்றுத்தொடர் |
| **ஆடிஆடி** ஓய்ந்துறங்கு | அடுக்குத்தொடர் |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# 15.அலகிடுதல்

## மெல்ல மலரும் மொட்டுகளுக்கான வழிமுறைகள்

- ஏழு சீர்களையும் ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதிய பின்னர் மெய்யெழுத்து வருமிடங்களில் / கோடிட வேண்டும்.
- பின் மெய்யெழுத்துகளை அடித்து விடவும்.
- எஞ்சியுள்ள உயிர் அல்லது உயிர்மெய்யெழுத்துகளை எண்ணி 1,2 ஆகிய எண்களைப் போட வேண்டும். எண்களைப் போடும் பொழுது முதலெழுத்து குறிலாக இருக்க வேண்டும்.
  கற்/க, கச/டற
- முதலெழுத்து நெட்டெழுத்தாக இருந்தால் தனியே பிரிக்கவும்.
  தே/ரினும்
- 1 என்ற எண் வந்தால் நேர் எனவும் 2 என்ற எண் வந்தால் நிரை எனவும் அசை பிரிக்கலாம்.
- வாய்பாடுகளை மனனம் செய்து கொள்ளவும்.

## அலகிடுதல் வாய்பாடுகள்

**நேர்**

- குறில் தனித்தும் – **க**
- குறில் ஒற்றும் – **கல்**
- நெடில் தனித்தும் – **நா**
- நெடில் ஒற்றும் – **நால்**

**நிரை**

இருகுறில் இணைந்தும் – **பல**
இருகுறில் இணைந்து ஒற்றும் – **பலம்**
குறில் நெடில் இணைந்தும் – **கலா**
குறில் நெடில் இணைந்து ஒற்றும் – **கலாம்**

**ஈரசை வாய்பாடு – 4**

- நேர் + நேர் – தேமா
- நிரை + நேர் – புளிமா
- நிரை + நிரை – கருவிளம்
- நேர் + நிரை – கூவிளம்

**இறுதிச்சீர் (ஓரசைச்சீர்) வாய்பாடு**

- நேர் – நாள்
- நிரை – மலர்
- நேர்பு (நேர்+ நேர்) – காசு
- நிரைபு (நிரை+நேர்) – பிறப்பு

**மூவசைச்சீர் வாய்பாடு – 4**
**(கனிச்சீர் அலகிடுதலில் வராது)**

நேர் + நேர் + நேர் – தேமாங்காய்
நிரை + நேர் + நேர் – புளிமாங்காய்
நிரை + நிரை + நேர் – கருவிளங்காய்
நேர் + நிரை + நேர் – கூவிளங்காய்







Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் சிறு வினாக்கள்

**இயல் - 1**

**1. குலைவகைப் பயிர் ஐந்தினை எழுதுக.**

கொத்து - அவரை, துவரை
குலை - கொத்து முந்திரி போன்றவற்றின் குலை
தாறு - வாழைத்தாறு
கதிர் - கேழ்வரகு, சோளம்
சீப்பு - வாழைத்தாற்றின் பகுதி

**2. அடிவகை, மணிவகை, இலைவகை பயிர்களின் பெயர்களை அட்டவணைப்படுத்துக.**

| அடிவகை | மணிவகை | இலைவகை |
|---|---|---|
| தாள் | கூலம் | இலை |
| தண்டு | பயறு | தாள் |
| கோல் | கடலை | தோகை |
| கழி | விதை | ஓலை |
| கழை | முத்து | சண்டு |
| அடி | கொட்டை | சருகு |

**3. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு யாது?**

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| வினையை உணர்த்தும் | கருத்தாவை உணர்த்தும் |
| காலம் காட்டாது | காலம் காட்டும் |
| படர்க்கை இடத்திற்கு உரியது | மூவிடத்திற்கும் உரியது |
| (எ.கா) பாடுதல், படித்தல் | (எ.கா.) பாடியவர், படித்தவர் |

**இயல் - 2**

**4. காற்று பேசியதைப்போல, நிலம் பேசுவதாக எண்ணிக்கொண்டு எழுதுக.**

- மனிதனே, உன் காலடியைத் தாங்கிக் கொண்டு நிற்கிறேனே, நான் தான் நிலம் பேசுகிறேன்.
- என்னில்தான் எத்தனை தோற்றங்களை நீ உருவாக்கியிருக்கிறாய். சோலைகள், ஏரிகள், மாடமாளிகைகள். புல்வெளிகள் எனப் பலவிதங்களில் என்னை அழகாக்கி விட்டாய்.
- மகிழ்ச்சி, அழகாக்கிய நீயே, இன்று என்னை வீழ்த்தி வருகிறாயே, எங்கு பார்த்தாலும் பச்சைப் புல்வெளியாக இருந்த நான் இன்று மாரியில்லாமல் மாறிவிட்டேனே!
- மனிதா, உன் சந்ததியை நினைத்துப்பார், பாலைவனத்திலாப் பயணம் செய்யப் போகிறார்கள்? சிந்தித்துச் செயல்படு!

**5. தொகைநிலைத் தொடர்களை விளக்குக**

தொகைநிலைத் தொடர்கள் அறுவகைப்படும். அவை,
வேற்றுமைத்தொகை - மதுரை சென்றார்
வினைத்தொகை - வீசுதென்றல்
பண்புத்தொகை - செங்காந்தள்
உவமைத்தொகை - மலர்க்கை
உம்மைத்தொகை - இரவுபகல்
அன்மொழித்தொகை - முறுக்கு மீசை வந்தார்

**இயல் - 3**

**6. வாழை இலையில் விருந்து என்பது தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று என்பதை விளக்குக.**

- தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
- தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது.
- நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர்.
- வாழை இலையில் உணவு பரிமாறும் முறையைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தனர்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பகுதி – IV (5x5=25)

## 16. செய்யுள் நெடுவினாக்கள்

**இயல் 1** **(பா.நூ.ப.எண்.20)**

**1. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.**

என்னைத் தாலாட்டிய மொழி!
எனதருமைத் தாய்மொழி!
என் இனிய தமிழ்மொழி!
எண்ணமெல்லாம் நிறைந்த மொழி!
என் தாய்மொழிக்குத் தலை வணங்குகிறேன்.
அனைவருக்கும் வணக்கம்!

**மனோன்மணீயம் சுந்தரனாரின் வாழ்த்துப்பாடல் விளக்கம்:**

- பூமி என்ற பெண்ணின் ஆடை நீராலான கடல், முகம் பாரத கண்டம் ஆகும்.
- நெற்றியாகத் தக்காணம் திகழ்கிறது.
- நெற்றியில் பொட்டு வைத்தது போல் தமிழகம் திகழ்கிறது. எல்லாத் திசைகளிலும் தமிழ்த்தாய் புகழ் பெற்று விளங்குகிறாள் எனச் சிறப்பிக்கிறார்.
- உலகின் மூத்த மொழி, இளமையான மொழி, வளமான மொழி, பெண்ணே, தாயே உன்னை வாழ்த்துகிறேன் என்று பலவாறு வாழ்த்துகிறார்.

**பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலின் பொருள்:**

- அன்னை மொழியாக அழகாய் அமைந்து பழமைக்குப் பழமையாய்த் திகழும் மொழி.
- குமரிக்கண்டத்தில் நிலைத்து நிற்கும் வகையில் பாண்டிய மன்னனின் மகளாகத் திகழும் மொழி.
- தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் தலையணிந்து விளங்கும் தமிழை வாழ்த்துகின்றேன்.

**ஒப்புமை:**

- இரு பாடல்களிலும் தமிழ் தாயாகவும், பழமையான மொழியாகவும் சிறப்பிக்கப்படுகிறது.
- எல்லாத்திசைகளிலும் புகழ் பெற்று நிலைத்து நிற்பது என்றும் இளமையானது என்றும் பொருள்பட அமைந்துள்ளது.
- பெண், தாய், மகள் என வெவ்வேறு வகையில் அழைத்தாலும் தமிழைத் தாயாகவே சிறப்பிக்கின்றனர்.
- நறுமணமிக்க மொழி என்ற பொருளில் இருபாடல்களும் அமைந்துள்ளன.

**இயல் - 2** **(பா.நூ.ப.எண்.44)**

**2. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.**

**விரிச்சி கேட்டல்:**

செய்யக்கூடிய செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? என்று ஐயம் கொண்ட பெண்கள் மக்கள் நடமாட்டம் குறைவான ஊர்ப்பக்கத்தில் போய் தெய்வத்தைத் தொழுது நின்று அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்பர். நல்ல சொற்கள் பேசினால் செயல் நன்மை தரும் எனவும் தீய மொழி பேசினால் தீமை தரும் எனக் கொள்வர் முதுபெண்டிர்.

**பெருமழை பெய்த விதம்:**

திருமால் குறுகிய வடிவம் கொண்டு மாவலி மன்னன் நீர் வார்த்து தரும் பொழுது, மண்ணுக்கும் விண்ணுக்குமாக பேருருவம் எடுத்து உயர்ந்து நின்றதைப் போன்றுள்ளது மழைமேகம். அம்மேகம் மலையைச் சூழ்ந்து பெருமழை பொழிகிறது.

**முதுபெண்டிர் நற்சொல் கேட்டல்:**

- ஊர்ப்பக்கம் உள்ள தெய்வத்தின் முன் முல்லைப்பூக்களையும் நெல்லையும் சேர்த்துத் தூவினர்.
- கயிற்றில் கட்டப்பட்ட நிலையில் இளங்கன்று பசியால் வாடியது. அதை இடைமகள் கண்டாள்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இயல் - 3 (பா.நூ.ப.எண்.68)

**3. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.**

**விண்ணப்பக் கடிதம்**

**அனுப்புநர்**

அ.தமிழழகன்,
15, வெற்றி நகர்,
தஞ்சாவூர்.

**பெறுநர்**

உணவுப் பாதுகாப்பு ஆணையர்,
உணவுப் பாதுகாப்பு ஆணையம்,
சென்னை.

**மதிப்பிற்குரிய ஐயா,**

**பொருள்**: உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் உள்ள உணவு விடுதியின் மீது நடடிவக்கை எடுக்க வேண்டுதல் - சார்பு.

வணக்கம். நான் எனது நண்பனுடன் கடந்த வாரம் தஞ்சாவூர் நூலகத்திற்கு அருகில் உள்ள உணவு விடுதியில் மதிய உணவு உண்டேன். விலை கூடுதலாக இருந்தது. உணவும் சுத்தமாகத் தயாரிக்கப்படவில்லை. விடுதியிலிருந்து வெளியே வருவதற்கு முன்பாகவே என் நண்பனுக்கு மயக்கம் வந்தது. மருத்துவரிடம் என் நண்பனை அழைத்துச் சென்றேன். அவன் உண்ட உணவில் கோளாறு இருந்ததாக மருத்துவர் கூறினார். ஆகவே, அந்த உணவுவிடுதியின் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இணைப்பு :-** 1) மருத்துவரின் சான்று.
2) விடுதி விலை ரசீது.

**இடம்:** தஞ்சாவூர்,
**நாள்:** 27.03.2020.

**இப்படிக்கு,**
**உண்மையுள்ள,**
அ.தமிழழகன்.

**உறைமேல் முகவரி :**

**பெறுநர்**

உணவுப் பாதுகாப்பு ஆணையர்,
உணவுப் பாதுகாப்பு ஆணையம்,
சென்னை.

இயல் - 7 (பா.நூ.ப.எண்.180)

**4. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் ‘உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்’ என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம்**

**அனுப்புநர்**

அ.தமிழழகன்,
15, வெற்றி நகர்,
தஞ்சாவூர்.

**பெறுநர்**

நாளிதழ் ஆசிரியர்,
தினமணி நாளிதழ்,
தஞ்சாவூர்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## 18. காட்சியைக் கண்டு கவினுற எழுதுதல்

**மெல்ல மலரும் மொட்டுகளுக்கான வழிமுறைகள்**

சித்திரமாய் வரைந்த படம்
சிந்தனையைத் தூண்டும் படம்!
தனித்துவமாய் நிற்கும் படம்
தத்துவத்தை உணர்த்தும் படம்!
ஓவியம் சொன்ன கருத்துகளை
தவிர்த்திடாமல் கடைப்பிடிப்போம்!

இயல்-1 (பா.நூ.ப.எண்.23)

**1. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**வாசித்தல்**

அறிவு ஊற்றின் பிறப்பிடமாம்
அமுதாய் கிடைக்கும் நூலகமாம்
சிந்தனைத் தூண்டும் செயல்பாட்டை
சீராய் செய்யும் நூலகமாம்!
குறிக்கோள் இல்லாச் சிந்தனைகள்
கடிவாளம் இல்லாத குதிரைகளாம்
ஏட்டுக் கல்வியை நேசித்து
ஏற்புடனே நாம் கற்றால்
நம்முடைய வாழ்க்கை புத்தகமாய்
நாளைய வரலாறு ஆகிடுமே!

இயல் - 2 (பா.நூ.ப.எண்.47)

**2. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**காற்று**

இயற்கை அழிவின் வெளிப்பாடு
உயிர்வளி இல்லா நிலைப்பாடு!
காற்றும் மாசாய் கிடக்குதைய்யா!
கானல் வாழ்வாய் தவிக்குதைய்யா!
இனியும் இந்நிலை வேண்டாமைய்யா!
நம்நிலை மாற்ற நினைப்போமைய்யா!
மரங்கள் வளர்ப்போம் நமக்காக!
உலகைக் காப்போம் சந்ததிக்காக!

இயல் - 3 (பா.நூ.ப.எண்.68)

**3. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**அன்பு**

ஏழ்மை வாழ்வில் அன்பு!
இறைவன் ஆட்சி நம்பு!
பகுத்தறிவால் வரும் அன்பு!
பயன் கருதாது நம்பு!
பகுத்துண்டு வாழும் அன்பு!
பாரில் சிறந்தது நம்பு!
போதும் என்ற பண்பு!
குவலயம் போற்றும் நம்பு!






Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இயல் - 7

8. படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக. (பா.நூ.ப.எண்.181)



**போர்க்களக் காட்சி**

தமிழர்கள் வீரத்திற்கு பெயர் பெற்றவர்கள். படை வீரமே மன்னனின் வீரம். யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, தேர்ப்படை என நாற்படைகளும் சிறப்புடன் திகழும். போர்பல கண்ட அரசனே வீரனாகக் கருதப்பட்டான். விழுப்புண் பெறுதலே வாழ்வின் சிறப்பெனக் கருதப்பட்டது.

9. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. (பா.நூ.ப.எண்.182)



**உழவன்**

மருத நிலத்தின் மாவலியாம்!
மனித வாழ்வின் உயிர்நிலையாம்!
உயிரைக் கொடுத்து உழைத்திடுவான்,
உண்டி கொடுத்து வாழ வைப்பான்!
வைகறைப் பொழுதின் நாயகனாம்,
வையம் வணங்கும் பெருமகனாம்!
உழவன் என்ற உணர்வினிலே
ஓங்கும் தமிழினப் பெருமைகளே!


இயல் - 8 (பா.நூ.ப.எண்.183)

10. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



1) பிறருக்கு உதவுதலே மேன்மையானது.
2) மன்னன் மக்களைப் பாதுகாக்கிறான்.
3) இப்படம் சிறந்த கருத்தை உணர்த்துகிறது.
4) எக்காலத்திற்கும் பொருந்துவது.
5) நீதிமுறை ஆட்சியை உணர்த்துகிறது.

11. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. (பா.நூ.ப.எண்.201)



**கொடை**

தானம் கொடுக்கும் தலைமுறையின்,
தலைசிறந்த பிள்ளைகள் நாம்!
கொடை கொடுக்கும் குலத்தினிலே,
பாரியின் பரம்பரை நாமெல்லாம்!
ஈதல் இசையின் மரபினிலே
இமயம்வரை தொட்டவர் நாம்!
இரவலரின் நிலைக்கண்டு,
இரங்கும் எளிய மனம் படைத்த,
புரவலரைத் தடுக்காதே!
புதையும் ஆசையில் அழியாதே!





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# 20. நிற்க அதற்குத் தக

இயல் - 1 (பா.நூ.ப.எண்.24)

1.

| இன்சொல் வழி | தீயசொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

**இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?**

**விடை:**

இன்சொல் பேசுவதே எனது வழியாகும். "இன்சொல்லே ஒரு மனிதனை உயர்ந்தவராகவும் நாகரிகமானவராகவும் காட்டும். நமக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு பிறரை மதித்து நடக்கும் பகுத்தறிவே. ஆகவே இன்சொல்லால் இதயங்களை வென்று விடு" என்று என் நண்பருக்குக் கூறுவேன்.

இயல் - 2 (பா.நூ.ப.எண்.48)

**2. வானொலி அறிவிப்பு ஜல் புயல் தென்கிழக்கே 150 கி.மீ தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

புயலின் போது

| | |
|---|---|
| புயலின் போது வெளியே செல்ல வேண்டாம். | வெளியேற நேர்ந்தால் ஆரம்பகட்ட எச்சரிக்கையின் போதே வெளியேறவும். |
| தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். | மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப்பகுதியிலேயே தங்கவும். |
| வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றவும். | காற்று அடிப்பது நின்றாலும் எதிர்த்திசையிலிருந்து மறுபடி வேகமாக வீச ஆரம்பிக்கும். எனவே காற்றடிப்பது முடிந்துவிட்டதாக நினைக்க வேண்டாம். |
| மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும். | வாகனத்தை ஓட்ட நேர்ந்தால் கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்கள், மின்கம்பிப் பாதைகள், நீர் வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும் வாகனத்தின் உள்ளேயே தங்கியிருக்கவும். |

**மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.**

**விடை:**

**புயல் பாதுகாப்புச் செயல்கள்:**

1) நான் என் குடும்பத்தாரைப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்று விடுவேன்.
2) மின்சாதனங்களைப் பயன்படுத்தாமல் பார்த்துக்கொள்வேன்.
3) தரைத்தளத்திலேயே தங்க வைப்பேன்.
4) புயலின்போது யாரும் வெளியே செல்லாமல் இருக்கும்படி அறிவுறுத்துவேன்.
5) ஏதேனும் விபத்து நடந்தால் அதை எதிர்கொள்வதற்கு ஏதுவாக முதலுதவிப்பெட்டி, உணவுப்பொருட்கள் போன்றவற்றைத் தயார்நிலையில் வைத்திருப்பேன்.
6) அடுத்த அறிவிப்பு வரும்வரையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தொடர்ந்து செய்வேன்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இயல் - 9 (பா.நூ.ப.எண்.229)

9. ஒவ்வொரு சூழலிலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தபடி இருக்கிறார்கள்; உதவி பெற்றபடியும் இருக்கிறார்கள்; சில உதவிகள் அவர்கள் மீதுள்ள அன்பினால் செய்கிறோம்; சில உதவிகள் இரக்கத்தால் செய்கிறோம். தொடர்வண்டியில் பாட்டுப் பாடிவரும் ஒருவருக்கு தம்மையறியாமல் பிச்சை போடுகிறோம். தொல்லை வேண்டாம் என்று கருதி, வேண்டா வெறுப்போடு சில இடங்களில் உதவி செய்கிறோம்.

**நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை....**

| உதவி | மனநிலை |
|---|---|
| வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவிய போது | இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு அவருக்கு மனமகிழ்ச்சி! |
| உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவியபோது | கல்லூரிப் படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு. |
| ஆதரவற்றோர் இல்லக்குழந்தைகளுக்கு ஒருவேளை உணவு வழங்கியபோது | அவர்களது முகத்தில் கண்ட மகிழ்ச்சியால் கிடைத்த ஆனந்தம். |
| ஏழைக்குழந்தைகளுக்கு எனது பழைய ஆடைகளைக் கொடுத்த போது | அவர்களுக்கு அது புத்தாடை. எனக்கு உள்ள நெகிழ்ச்சி. |

## 21. மொழிபெயர்த்தல்

இயல் - 1 (பா.நூ.ப.எண்.21)

**மொழிபெயர்க்க.**

1. i) **If you talk to a man in a language he understand, that goes to his head. If you take to him in his own language that goes to his heart - Nelson Mandela.**

ஒருவரிடம் அவர் புரிந்து கொள்ளக்கூடிய ஏதாவது ஒரு மொழியில் பேசினால் அது அவருடைய மூளையைச் சென்றடைகிறது. அதுவே அவர் தாய்மொழியில் பேசினால் அது அவருடைய இதயத்தைச் சென்றடைகிறது - நெல்சன் மண்டேலா

ii) **Language is the road map of a culture. If tells you where its people come from and where they are going - Rita Mae Brown**

மொழி என்பது கலாச்சாரத்தின் வழிகாட்டி. அதுவே அம்மொழி பேசும் மக்கள் எங்கிருந்து வந்தார்கள், எங்கே செல்கிறார்கள் என்பதை உணர்த்தும். - ரீடா மேக் ப்ரௌன்

இயல் - 2 (பா.நூ.ப.எண்.45)

2. **The Golden sun gets up early in the morning the starts its bright ray to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flower's fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.**

**வைகறைக் காட்சிகள்**

பொன்னிறக் கதிரவன் வைகறைப் பொழுதில் தனது ஒளிமிகுந்த கதிர்களால் இருளை விரட்டுகிறான். வெண்மேகங்கள் தனது பயணத்தைத் தொடங்குகின்றன. பலவண்ணப் பறவைகள் தனது சிறகை அசைத்து இதமான சூழ்நிலையை உருவாக்குகின்றன. அழகிய பட்டாம்பூச்சிகள் பூக்களைச் சுற்றி நடனமாடுகின்றன. மலர்கள் தென்றலில் தன்மணத்தை நிரப்புகின்றன. அத்தென்றலானது எல்லா இடங்களிலும் பரவி புத்துணர்வைப் பரப்புகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## வினாத்தாள் அமைப்பைத் தவிர்த்து எஞ்சியப் பகுதிகள்

## 22. பாநயம் பாராட்டுதல்

இயல் - 1 (பா.நூ.ப.எண்.22)

1. தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே

- கா.நமச்சிவாயர்

**திரண்ட கருத்து:-**

தேனைவிட இனிமையான செம்மைத் தமிழ்மொழியே! தென்னாடு பெருமையடையச் செய்யும் தென்மொழியே! உடலிலும் உயிரிலும் ஒளிரும் உயர்மொழியே! உணர்வுக்கு உணர்வாய் விளங்கும் மொழியே! புகழால் வானினும் உயர்ந்த தமிழ்மொழியே! மனிதர்களுக்கு இருகண்களாக விளங்கும் மொழியே! தனிச்சிறப்பு மிக்க தமிழ்மொழியே! மேலும் மேலும் சிறந்து விளங்கும் தமிழ்மொழியே!

**மையக்கருத்து :-**

தமிழ்மொழி உடல், உயிர், உணர்வு, கண் ஆகிய அனைத்தின் பயனாக விளங்குகிறது.

**தொடை நயம்:-**

**(i) மோனைத்தொடை :-**

சீர்தோறும் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை.

**தே**னினும் - **தெ**ன்னாடு
**ஊ**னினும் - **உ**ணர்வினுக்கு
**தா**னனி - **த**ழைத்தினி

**(ii) எதுகைத்தொடை :-**

சீர்தோறும் அடிதோறும் முதலெழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை.

தே**னி**னும் - ஊ**னி**னும் - வா**னி**னும்

**(iii) இயைபுத்தொடை :-**

அடிதோறும் இறுதியில் உள்ள எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றி வருவது இயைபு.

மொழியே - மொழியே - மொழியே

**அணி நயம் :-**

தமிழ்மொழியின் சிறப்பு உயர்வாகக் கூறப்பட்டிருப்பதால் இது உயர்வு நவிற்சி அணி.

**சந்த நயம் :-**

எட்டுச் சீர்களைக் கொண்டுள்ளதால் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பகுதி – V (3x8=24)

## 32. உரைநடை நெடுவினாக்கள்

இயல் - 1 (பா.நூ.ப.எண்.20)

**1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.**

**தமிழின் சொல்வளம்.**

**"கல்தோன்றி மண் தோன்றாக்**
**காலத்தே முன்தோன்றி மூத்தக் குடி"** என்பதற்கு ஏற்றவாறு தமிழ்மொழி தோன்றியது என்பது உண்மை. இதை தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.

- கால வெள்ளத்தில் கரைந்து போன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது தமிழ்.
- தமிழ்ச் சொல்வளம் பல துறைகளிலும் உள்ளது.
- அதில் பயிர்வகைச் சொற்கள் மட்டும் சிறப்பாக எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன.
- ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிக்கும் சொற்கள்: தாள், தண்டு, கோல், தூறு, தட்டு, கழி, கழை, அடி ஆகும்.
- தாவரங்களின் இலை வகைகள்: தாள், தோகை, இலை, ஓலை, சண்டு, சருகு.
- கொழுந்து வகை: (நுனிப்பகுதி) துளிர், கொழுந்து, குருத்து, கொழுந்தாடை
- பிஞ்சு வகை: வடு, பூம்பிஞ்சு, மூசு, கவ்வை, கச்சல் இன்னும் பிற. மேற்கண்ட அனைத்தும் தமிழ் சொல் வளமுடையது என்பதைக் காட்டுகிறது.

**புதிய சொல்லாக்கத்திற்கான தேவை:**

- புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள், கருவிகள், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு வேறு மொழி சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்கள் கண்டுபிடிக்க வேண்டும்.
- ஏனெனில் பிறமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்கள் அமைந்தால் மட்டுமே தமிழ் நிலைத்து நிற்கும்.
- வணிகம், பொருளாதாரம், அரசியல், சமூகம், அரசு சார்ந்த துறைகள் அனைத்திலும் தமிழ் மொழியாக்கம் தகுந்த சொற்களோடு அமைய வேண்டும்.
- கால ஓட்டத்திற்கு ஏற்றவாறு தமிழ்மொழியும் நடைபோடுவது அவசியம். புதிய சொல்லாக்கம் அழிந்து வரும் மொழிகளின் வரிசையில் இல்லாமல் எதிர்கால சந்ததியினருக்கு மொழியை எடுத்துச் செல்ல உதவும் என்பது உறுதி.

**2. ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.**

**சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்பு பற்றி உரையாடுதல்.**

**அமுதா** : கமலா வா! எப்போது வெளிநாட்டிலிருந்து வந்தாய்? பார்த்து ஒரு வருடமாயிற்று நலமா?

**கமலா** : நான் நலம்! நீ நலமா! என்ன கையில் புத்தகத்தோடு அமர்ந்துள்ளாய்?

**அமுதா** : இதுவா, பல்துறைச் செய்திகள் அடங்கிய புத்தகம். இது நமது அன்றாட வாழ்வில் பின்பற்றப்படும் அறநெறிப்பண்புகள், மருத்துவக் குறிப்புகள், அரசியல், தமிழின் பெருமையை விளக்கும் இலக்கிய நூல்கள் பட்டியல் இவை அனைத்தும் அடங்கிய தொகுப்பு நூல். தமிழ் படிக்கத் தெரியுமா? கமலா!

**கமலா** : பேச மட்டுமே தெரியும் அமுதா. ஆங்கில இலக்கியங்களை மட்டுமே விரும்பிப் படிப்பேன்.

**அமுதா** : ஓ! அப்படியா!

**கமலா** : இது என்ன நூல் அட்டைப் படம் நன்றாக உள்ளதே!

**அமுதா** : ஓ! இதுவா, இரட்டைக்காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும்.

**கமலா** : சென்ற வருடம் வந்த போது பாட்டி சிலப்பதிகாரக் கதையைக் கூறினார்கள். இந்நூலின் காப்பியத்தலைவி கண்ணகிதானே!



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



- பயணத்திற்குப் பிச்சைக்காரனிடமிருந்து ஓர் அணா எடுக்கிறார்.(சுயநலக்காரன்)
- ஆனால் பிச்சைகாரனின் வார்த்தைகளைக் கேட்டவுடன் குற்ற உணர்ச்சியில் தலைகுனிகிறார் (மனசாட்சியுள்ளவன்).

**முடிவுரை:**

ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களை சாதாரண மனிதனாகக்காட்டி, மனசாட்சியுள்ளவனாகச் சிறக்கச் செய்கிறார்.


**ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழ்**
**குறிஞ்சி வார இதழ்**



காலம் : 24.04.1934 - 08.04.2015
வெளியிடும் நாள்: 27.03.2020

தொகுப்பு : 4
முதல் தொகுப்பு: மார்ச் இறுதி வாரம்

**சிறுகதை மன்னன், சாகித்திய அகாதெமிவிருது, ஞானபீட விருது இவற்றிற்கு உரியவரான ஜெயகாந்தனின் உணர்ச்சிப்பூர்வமானப் படைப்பு பற்றி மனம் மகிழ்ந்த மக்களின் குரல்**

**விரைவில் வெளியீடு!**
**விரைந்து வாரீர்!** **இலக்கியச் சுவையைப் பெற்று அக மகிழ்வீர்!**


## 33. துணைப்பாட நெடுவினாக்கள்

### மெல்ல மலரும் மொட்டுகளுக்கான துணைப்பாடம் (விரிவானம்)

1. **புயலிலே ஒரு தோணி என்ற தலைப்பில் துணைப்பாடக் கட்டுரையை எழுதுக.**

### புயலிலே ஒரு தோணி

**குறிப்புச்சட்டகம்**

- **முன்னுரை**
- **கலக்கும் காற்று கலங்கும் கப்பல்**
- **கரையை அடைதல்**
- **முடிவுரை**

**முன்னுரை:**

இக்கதையின் ஆசிரியர் இடம் பெயர்ந்து பிற நாட்டில் வாழ்ந்த தமிழர்களில் ஒருவர். அவர் கடற்பயணத்தின் போது தான் கண்ட காட்சிகளை நேரடி அனுபவங்களோடு கற்பனைக் கலந்த கதையாகப் புயலிலே ஒரு தோணி புதினத்தை எழுதியுள்ளார்.

**கலக்கும் காற்று கலங்கும் கப்பல்:**

திடீரென்று கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன் மழை பெய்தது. தொங்கான் (கப்பல்) தாவித் தாவிக் குதித்து விழுவிழுந்து நொறுநொறு என்று நொறுங்குகிறது. தொங்கானில் ஓட்டை ஏற்பட்டுத் தண்ணீர்ப் புகுந்தது. அதை மாலுமிகள் சரி செய்தனர்.

**கரையை அடைதல்:**

கப்பல் பினாங்கு துறைமுகத்தை அடைந்தது. ஜப்பானிய அதிகாரி ஒருவர் தமிழர்கள் என அடையாளம் கண்டு உறுதி செய்தார்.

**முடிவுரை:**

புயலில் கப்பல் சிக்கி தன் நிலை மாறி கரையை அடைவதற்குள் நடந்த நிகழ்வுகள் மனதை உருக்குலைய வைக்கிறது. புயலிலே ஒரு தோணி படும்பாட்டைப் பற்றி இங்குக் கண்டோம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**ஆசிரியர் மனமாற்றம்:**

ஏழைகள் உதவும் பண்பினை தாம் பெறாததை நினைத்து வெட்கமடைந்தார் ஆசிரியர். மனைவியை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு குப்புசாமியைப் பார்க்க பழங்களுடன் விரைந்தார்.

**முடிவுரை:**

'மனம் இருந்தால் மார்க்கமுண்டு' ஆசிரியர் தானும் வீரப்பன் போன்று குப்புசாமிக்கு உதவும் ஒருவனாக இருப்பதாக கதையை முடித்துள்ளார்.

**இயல் - 2**

1. **புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும், ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?**

## புயலில் தோணி படும்பாடு

**முன்னுரை:**

புயலிலே ஒரு தோணி கதையின் ஆசிரியர் ப.சிங்காரம். இவர் புலம் பெயர்ந்த தமிழர்களில் ஒருவர். அவர் இந்தோனேசியாவிற்கு புலம் பெயர்ந்தபோது நடந்த நேரடி அனுபவங்களைக் கற்பனையுடன் கலந்து கதையாக எழுதியுள்ளார்.

**வருணனைகள்:**

- ➢ அலைகள் எண்ணெய் பூசியவைப் போல் மொழுமொழுவென நெளிந்தன.
- ➢ கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன.
- ➢ வானும் கடலும் வளியும் மழையும் மீண்டும் ஒன்றுகூடிக் கொந்தளிக்கின்றன.
- ➢ பகல் இரவாகி மீண்டும் பகலாகி இரவாகியது. பிறைமதி வெளிச்சம் சிந்திற்று.
- ➢ கருநீலவானில் விண்மீன்கள் வெகு ஒளியுடன் கண்சிமிட்டி நின்றன.

**அடுக்குத்தொடர்கள்:**

- ➢ கொட்டு கொட்டென்று
- ➢ மாறி மாறி
- ➢ கரை! கரை! கரை!
- ➢ ஓடி வாருங்கள்! ஓடி வாருங்கள்!
- ➢ எங்கெங்கே
- ➢ சூரியன் சூரியன் சூரியன்
- ➢ பிலவான் பிலவான் (பிலவான் என்பது இந்தோனேசியாவில் உள்ள இடம்)
- ➢ தாவித்தாவி
- ➢ கூட்டம் கூட்டமாய்
- ➢ இறுக்கியிறுக்கி

இவையாவும் பயம், அச்சம் காரணமாக அடுக்குத் தொடராக அடுக்கி வந்துள்ளது.

**ஒலிக்குறிப்புச் சொற்கள்:**

- ➢ இருட்டு இருட்டு கும்மிருட்டு
- ➢ குட்டிருட்டு சிலுசிலு மரமரப்பு
- ➢ நொய்ங் புய்ங் நொய்ங்
- ➢ புய்ங் நொய்ங் புய்ங் இடி
- ➢ முழக்க சீனப் பிசாசுகள்

**புயலில் தோணி படும்பாடு:**

- ➢ கொளுத்திக் கொண்டிருந்த வெயில் இமை நேரத்தில் மறைந்து விட்டது, புழுங்கிற்று. பாண்டியன் எழுந்து அண்ணாந்து பார்த்தான்.
- ➢ ஒரே இறுக்கம் எதிர்கோடியில் வானையும், கடலையும் மாறிமாறி பார்த்தவாறு தலைமை மாலுமியுடன் பேசிக்கொண்டிருந்த மாலுமிகள் தோணியின் கயிறுகளை இறுக்குகிறார்கள்.
- ➢ கிடுகிடுக்கும் இடி முழக்கம், மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன.
- ➢ வானுடன் கடல் கலந்துவிட்டது. மழை தெரியவில்லை வளியுடன் காற்று இணைந்துவிட்டது.
- ➢ தொங்கான் (கப்பல்) அப்படியும் இப்படியும் தாவிக்குதித்து தத்தளித்தது.
- ➢ பாண்டியன் எழுந்தான். எங்கெங்கோ இடுக்குகளில் முடங்கி கிடந்த உருவங்கள் தலை தூக்கின.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## 34. பொதுக்கட்டுரைகள்

### குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பு ஒன்று தருதல்

மெல்ல மலரும் மொட்டுகளுக்கான வழிமுறைகள்

- **கட்டுரை எழுதும்போது தலைப்பு இடுவது.**
- **குறிப்புச்சட்டகம்: வினாத்தாளில் கேட்கப்பட்ட வினாவில் உள்ள தலைப்புகளைக் கட்டமிட்டு எழுதுக. அதனுடன் முதலில் முன்னுரை நடுவில் உட்தலைப்புகள் இறுதியில் முடிவுரை எனத் தலைப்பிடுக.**
- **கட்டுரைப் படிக்காத நிலையிலும் குறைந்தது 4 மதிப்பெண் பெற இயலும்.**

**எடுத்துக்காட்டு :**

**குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.**

**முன்னுரை – விண்வெளியில் தமிழரின் அறிவு – கல்பனா சாவ்லா – விண்வெளி அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை – முடிவுரை**

**விண்வெளியில் தமிழரின் அறிவு**

**குறிப்புச்சட்டகம்**
- **முன்னுரை**
- **விண்வெளியில் தமிழரின் அறிவு**
- **கல்பனா சாவ்லா**
- **விண்வெளி அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை**
- **முடிவுரை**

**முன்னுரை:**

விண்வெளியில் தமிழரின் அறிவு பற்றி இங்குக் காண்போம்.

**விண்வெளியில் தமிழரின் அறிவு:**

விண்வெளியில் தமிழர்கள் நிறைந்த அறிவு பெற்றிருந்தனர்.

**கல்பனா சாவ்லா:**

1983 ஆம் ஆண்டு நாசா அமெஸ் ஆராய்ச்சிக்கூடத்தில் துணைத் தலைவராகப் பணியாற்றினார்.

**விண்வெளி அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை:**

மாணவ சமுதாயத்தினர் விண்வெளி ஆய்வில் ஈடுபட வேண்டும்.

**முடிவுரை:**

விண்வெளியில் தமிழரின் அறிவு பற்றி இங்குக் கண்டோம்.

**குறிப்பு:**

| | |
|---|---|
| தலைப்பு | - 1 (அ) ½ மதிப்பெண் |
| குறிப்புச்சட்டகம் | - 1 (அ) ½ மதிப்பெண் |
| முன்னுரை | - 1 மதிப்பெண் |
| முடிவுரை | - 1 மதிப்பெண் |
| உட்தலைப்பு | - 4 மதிப்பெண் |

தகுந்த மேற்கோள் கொடுக்கப்பட்டு விளக்கம் கொடுத்தால் உட்தலைப்பிற்கு 4 மதிப்பெண்.

**இயல் - 1** **(பா.நூ.ப.எண்.22)**

1. **குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்குப் பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவையாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம் மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள் - இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**



• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## சான்றோர் வளர்த்த தமிழ்

**குறிப்புச்சட்டகம்**

- முன்னுரை
- தென்னவர் வளர்த்த தமிழ்
- சிற்றிலக்கியங்களின் சிறப்பு
- தமிழ் வளர்த்த சான்றோர்கள்
- தமிழ் மொழியின் தொன்மை
- முடிவுரை

**முன்னுரை:**

மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழ்மொழி மக்களால் பேசப்பட்டும் இன்னும் இளமையாகவும் இனிமையாகாவும் உயிர்ப்போடும் இருந்து வருகிறது. இக்கருத்தை மகாகவி பாரதியார்,

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்**
**இனிதாவது எங்கும் காணோம்"**

என்று பாடியுள்ளது, தமிழ் மொழியின் சிறப்பை உணர்த்துவதாக அமைந்துள்ளது. தமிழ் மொழி வளர்ந்த விதத்தை இக்கட்டுரையில் காண்போம்.

**தென்னவர் வளர்த்த தமிழ்:**

தமிழ் வளர்த்த தென்னவன் என்ற புகழுக்கு உரியவர் அதிவீரராமபாண்டியன். இவர் எழுதிய நைடதம் புலவர்கட்கு ஔடதம் என்பர். மூவேந்தர்கள் தமிழைப் புலவர்கள் மூலம் வளர்த்தனர். அதில் பாண்டிய மன்னர்கள் சங்கம் வைத்துத் தமிழை வளர்த்த விதமும், தமிழை மேலும் துளிர்விட்டு வளர வைத்ததும் சிறப்பு. முதற்சங்கம் தென் மதுரை, இடைச்சங்கம் கபாடபுரம், கடைச்சங்கம் மதுரை என்பது இறையனார் களவியல் பாயிர உரையாலும், தொல்காப்பிய உரையாசிரியர்களின் உரைக்குறிப்புகளாலும் அறியலாம். தமிழ் என்றால் மதுரை; மதுரை என்றால் தமிழ். இவையிரண்டும் பிரிக்க முடியாதவை. மதுரையின் மாண்பினை எடுத்துக் கூறும் நூல்கள் மதுரைக்காஞ்சி, பரிபாடல், சிலப்பதிகாரம், திருவிளையாடற்புராணம் ஆகும்.

**சிற்றிலக்கியங்களின் சிறப்பு:**

**"பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்**
**தொண்ணூற்றாறு என்னும்**
**தொகையது ஆம்"**

என்கிறது பிரபந்த மரபியல் என்ற பாட்டியல் நூல். பிள்ளைத்தமிழ் - குழந்தையின் பத்து பருவங்கள்; சதகம் - அகம், புறம் பற்றிய நூறு பாடல்கள்; பரணி - ஆயிரம் யானைகளை வென்றவனைப் பாடுவது கலம்பகம் - பதினெட்டு உறுப்புகள்; உலா - தலைமகன் உலாவை எழுபருவ மகளிர் கண்டுகளித்தல்; அகப்பொருள் கோவை - களவு, கற்பு; முதல், கரு, உரி - அகம் இவையெல்லாம் தமிழ் அன்னைக்கு அழகு சேர்த்தவைகளாகும். கற்பனை ஆற்றலைப் பெருக்குவதில் சிற்றிலக்கியங்கள் பேருதவி புரிகின்றன. மக்களின் வாழ்க்கை வரலாறு, பண்பாடு மக்களின் வழிபாட்டு முறைகள் பற்றி அறிய உதவும் பெட்டகம். ஆற்றுப்படை முதல் குறவஞ்சி வரை பதினான்கு மட்டும் புகழ்மிக்கன.

**தமிழ் வளர்த்த சான்றோர்கள்:**

வெளிநாட்டவரான வீரமாமுனிவர், கால்டுவெல், போப், வேதநாயகம் பிள்ளை, கிருஷ்ணப்பிள்ளை போன்றோர் தமிழை வளர்ப்பதற்கு நூல்களை இயற்றி செம்மையாக்கினார்கள். பட்டினத்தார், காளமேகம், தாயுமானவர் போன்றோர் பிற்கால தமிழ் வளர்ச்சிக்கு உதவியர்கள். ஆயிரக்கணக்கான புலவர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழை வளர்ப்பதற்குப் பாடுபட்டுள்ளனர்.

**தமிழ் மொழியின் தொன்மை:**

**"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே**
**முன் தோன்றி மூத்தக் குடி"**

**- புறப்பொருள் வெண்பாமாலை**

இவை தமிழின் தொன்மையைப் புலப்படுத்துகிறது. தொன்மைக்காலத்தில் வாழ்ந்த தொல்காப்பியரே தமிழைத் "தொன்மொழி" எனக் கூறியுள்ளார். தமிழ்மொழி பிறமொழிக் கலப்பின்றி இயங்கும் திறனுடையது. இதுவே உலகமெங்கும் தமிழைப் பரவச் செய்யும் அளவிற்குக் கொண்டு சென்றது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**முடிவுரை:**

நாம் இயற்கையோடு இணைந்த வாழ்வை வாழ்வோம். இயற்கையைப் போற்றுவோம். மரங்களை நட்டு பசுமையை உண்டாக்குவோம். இதனால் சுற்றுச் சூழல் தூய்மை பெறும். இயற்கைச் சீற்றங்களைத் தடுப்போம். இதை மாணவப் பருவத்திலேயே விதையாக விதைப்போம்; எதிர்காலத்தில் நமது நாடு தூய்மையான இந்திய நாடாக மிளிரட்டும்.

**இனியதோர் உலகைப் படைப்போம்.**

12. **கீழ்க்கண்ட குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பு தருக.**
**முன்னுரை - சேமிப்பின் அவசியம் - சேமிப்பின் பயன் - இலக்கியங்களில் சேமிப்பு - சிக்கன வாழ்வு - மாணவப்பருவத்தில் சேமிப்பு - முடிவுரை**

**சிக்கனமும் சிறுசேமிப்பும்**

**குறிப்புச் சட்டகம்**

- **முன்னுரை**
- **சேமிப்பின் அவசியம்**
- **சேமிப்பின் பயன்**
- **இலக்கியங்களில் சேமிப்பு**
- **சிக்கன வாழ்வு**
- **மாணவப் பருவத்தில் சேமிப்பு**
- **முடிவுரை**

**முன்னுரை:**

'சிறு துளி பெரு வெள்ளம்' என்னும் பழமொழிக்கேற்ப சிறுகச்சிறுக பொருளைச் சேமிப்பது அவசியம். அது இயற்கை புறக்கணிப்பால் வருமானம் குறையும் போது உதவி செய்யும்.

**'சிக்கனம் என்பது வீட்டைக் காக்கும்**
**சேமிப்பு நாட்டைக் காக்கும்'**

எவ்வாறு சிக்கனத்தைப் பயன்படுத்திச் சேமிக்க வேண்டுமென இக்கட்டுரையில் காண்போம்.

**சேமிப்பின் அவசியம்:**

சிக்கனம் என்பது மற்றவர்களின் பட்டினியைக் கூடப் போக்கும். வாழு, வாழவிடு! என்பது தான் சிக்கனத்தின் தாரக மந்திரம். தனிமனித வாழ்வில் மனிதனின் தரத்தை உயர்த்த சிக்கனமும் சேமிப்பும் மிக அவசியமானது. தேவையற்ற செலவினைத் தவிர்க்க வேண்டும்.

**சேமிப்பின் பயன்:**

உழைக்கும் காலத்தில் சிறிது சிறிதாகச் சேமித்து வைக்கும் பணம் ஓய்வு காலத்திலும், உடல் நலக் குறைபாடு ஏற்படும் காலத்திலும் பேருதவியாக இருக்கும். எறும்புகள், தேனீக்கள் கூட மழை வரும் காலங்களில் பயன்பெற உணவைச் சேமிக்கின்றன. ஆடம்பரச் செலவுகள் செய்யக்கூடாது. எதிர்பாராத திடீர் செலவுகளுக்குச் சேமிப்பு உதவும்.

**'வரும் முன் காப்போம்'**

**இலக்கியங்களில் சேமிப்பு:**

**ஆகாறு அளவு இட்டிதாயினும் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை.**

வரவுக்குள் செலவு அமைய வேண்டும். செலவு அகலமாக (அதிகமாக) இருக்கக் கூடாது என்கிறார் திருவள்ளுவர்.

**அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**தமிழ் வளம் பெற ஆற்ற வேண்டிய பணிகள்:**

பாரதிதாசனார் 37 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணிபுரிந்து மாணவர்களிடம் தமிழ் உணர்வினை வளர்த்தார்.

> **"எளிய நடையில் தமிழ்நூல்கள் எழுதிடவும் வேண்டும்.**
> **இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்"**

என்று புலவர்களுக்கு அறிவுறுத்துகின்றார். தமிழ்மொழியில் சிந்தனைகள் புதிதுபுதிதாக விளைய வைத்து வெளிநாடுகள் போற்றும் மிகுதியான நூல்களைப் படைக்க வேண்டும். 'எங்கும் எதிலும் தமிழ் என்ற நிலை எய்திட, பணிகள் செய்வீர்' என்று தமிழ் அறிஞர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் அறைகூவல் விடுக்கின்றார்.

**பாரதிதாசன் போற்றும் பெண்கல்வி:**

பெண்கல்வி என்பது தன்னை மட்டுமே செப்பனிட மட்டுமல்ல, தான் சார்ந்த குடும்பத்தினரின் அறிவின் வளர்ச்சிக்காகவும் என்பதை குடும்ப விளக்கு என்ற கவிதைத் தொகுப்பால் எடுத்துரைக்கிறார். கல்வி இல்லாத பெண்களின் நிலை குறித்து இருண்ட வீடு என்ற கவிதைத் தொகுப்பில் கோடிட்டுக் காட்டுகிறார்.

> **ஆண் உயர்வென்பதும் பெண் உயர்வென்பதும் நீணிலத் தெங்கனும் இல்லை.**
> **வாணிகம் செய்யலாம்; பெண்கள் வானூர்தி ஓட்டலாம்.....**

**பெண்ணியம்:**

அரை நூற்றாண்டுகளுக்கு முன்னரே பொருளாதார சுதந்திரம் பற்றியும் பெண்கல்வி குறித்தும் பெண்களின் ஆளுமை குறித்தும் தன் கவிதை கொண்டு எடுத்துரைத்துள்ளார். ஒவ்வொரு குடும்பமும் பல்கலைக்கழகமாகத் திகழப் பெண்கல்வி அவசியம் என்று வலியுறுத்தியுள்ளார்.

**முடிவுரை:**

> **"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
> **மங்காத தமிழென்று சங்கே முழங்கு"**

என்ற பாடல் பாரதிதாசனார் தமிழுக்குத் தந்த இனிய கீதம். தாய்மொழியாகிய தமிழின் மீது ஒவ்வொரு தமிழனும் பற்றுக்கொள்ள இப்பாடல் வரிகள் சாலச்சிறந்தது. பாவேந்தரின் தமிழ்ப்பற்றும் பெண்ணின் சிறப்பை உணர்ந்து பாடிய எழுச்சிமிகு பாடல்களும் அவரின் சிறப்பைப் பறைசாற்றுகின்றன.

## 35. கற்பவை கற்றபின் (செய்யுள், உரைநடை, துணைப்பாடம்)

**இயல் - 1**

1. **நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
   **ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
   **கற்றறிந்தார் ஏத்தும் கலியொடு அகம்புறம் என்று**
   **இத்திறத்த எட்டுத்தொகை"**

   **-இச்செய்யுள் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க் காரணத்துடன் எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| நற்றிணை | - நன்மை + திணை என்றும் நல் + திணை என்றும் கூறுவர். உயர்வான அக ஒழுக்கத்தைக் கூறுவதால் நற்றிணை எனப் பெயர்பெற்றது. |
| குறுந்தொகை | - குறைந்த அடி அளவால் அமைந்த தொகை நூலாதலால் குறுந்தொகை எனப்பட்டது. |
| ஐங்குறுநூறு | - ஐந்திணைப் பற்றிய குறுகிய நூறு பாடல்களைக் கொண்டுள்ளதால் ஐங்குறுநூறு எனப்பட்டது. |
| பதிற்றுப்பத்து | - பத்து சேர அரசர்களைப் பற்றிய பத்துப் பத்து பாடல்களைக் கொண்டுள்ளதால் பதிற்றுப்பத்து எனப்பட்டது. |
| பரிபாடல் | - அகம், புறம் கலந்த நூலாதலாலும், பரிந்து செல்லும் ஓசையுடைய பரிபாட்டுகளைக் கொண்டிருப்பதாலும் பரிபாடல் எனப்பட்டது. |

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## 36. மெல்ல மலரும் மொட்டுகளுக்கான உரைநடை நெடுவினாக்கள்

பகுதி – V

இயல் - I (3x8=24)

1. **தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.**

**தமிழின் சொல்வளம் :**

➢ தமிழ்மொழி நிலைத்து நிற்கும் மொழி.

➢ தமிழ் சொல்வளம் மிக்கது.

➢ ஒரு தாவரத்தின் அடிப்பகுதி, இலை. கொழுந்து, பிஞ்சு என அனைத்திற்கும் தமிழ் சொற்களில் வகைப்படுத்தப்பட்டு உள்ளன.

எ.கா : கொழுந்து : துளிர், கொழுந்து, குருத்து கொழுந்தாடை.

**புதிய சொல்லாக்கத்திற்கான தேவை :**

➢ அறிவியல் கண்டுபிடிப்பிற்கு ஏற்றவாறு தமிழ் மொழியில் புதிய சொற்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

➢ வணிகம், பொருளாதாரம், அரசியல், சமூகம், அரசு சார்ந்த துறைகளில் மொழியாக்கம் அமைவது

எதிர்கால சந்ததியினருக்குத் தமிழ் மொழியைக் கொண்டு செல்லும்.

2. **ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.**

சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்பு பற்றி உரையாடுதல்.

**அமுதா** : கமலா எப்படி உள்ளாய்! வெளிநாட்டிலிருந்து எப்போது வந்தாய்?
**கமலா** : சென்ற வாரம் வந்தேன். நீ நலமா! நான் நலமாக உள்ளேன்.
**அமுதா** : கையில் உள்ள புத்தகம் இலக்கியமா!
**கமலா** : ஆம், இது ஆங்கில இலக்கியம். அமுதா உன்னிடமிருந்து தமிழ் இலக்கியம் பற்றி தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.
**அமுதா** : உலகப்பொதுமறை திருக்குறள், இரட்டைக்காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனப் பல்வேறு இலக்கியங்கள் உள்ளன.
**கமலா** : இலக்கியங்களின் சிறப்பை அறிய எனக்கு இந்த இலக்கியங்களை வாங்கி தா அமுதா! படித்து மகிழ்கிறேன்.
**அமுதா** : அவ்வாறே நான் வாங்கித் தருகிறேன். உன்னை சந்தித்ததில் மகிழ்ச்சி.
**கமலா** : நன்றி, எனக்கும் மகிழ்ச்சி.

**இயல் : 3**

3. **உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.**

**விருந்தோம்பல் :**

இல்லத்திற்கு வரும் உறவினரை, வரவேற்று முகம் மலர்ந்து அவர்கள் மனம் மகிழும்படி விருந்தளிக்க வேண்டும்.

எங்கள் வீட்டிற்கு வந்த உறவினரை வரவேற்ற விதம் :

➢ வாசல் வரை வந்து வரவேற்றேன்.

➢ தண்ணீர் கொடுத்து தாகத்தைத் தீர்த்தேன்.

➢ நலம் விசாரித்தேன்.

➢ ஊரில் உள்ள உறவினரைப்பற்றி நலம் விசாரித்தேன்.

➢ அவர்களுக்கு அறுசுவை உணவு சமைத்து பரிமாறி மகிழ்ந்தேன்.

➢ அவர்களும் மகிழ்ந்து பாராட்டினர்.

➢ வாசல் வரை சென்று வழி அனுப்பி வைத்தேன்.

**இயல் : 4**

4. **ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த தேநீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.**





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## 37. மெல்ல மலரும் மொட்டுகளுக்கான பொதுக்கட்டுரைகள

**குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பு ஒன்று தருதல்**

- கட்டுரை எழுதும்போது தலைப்பு இடுவது.
- குறிப்புச்சட்டகம் : வினாத்தாளில் கேட்கப்பட்ட வினாவில் உள்ள தலைப்புகளைக் கட்டமிட்டு எழுதுக. அதனுடன் முதலில் முன்னுரை நடுவில் உட்தலைப்புகள் இறுதியில் முடிவுரை எனத் தலைப்பிடுக.
- கட்டுரைப் படிக்காத நிலையிலும் குறைந்தது 4 மதிப்பெண் பெற இயலும்.

எடுத்துக்காட்டு :

### இயல் - 4

1. **குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.**

முன்னுரை – விண்வெளியில் தமிழரின் அறிவு – கல்பனா சாவ்லா – விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை – முடிவுரை.

**விண்வெளியில் தமிழரின் அறிவு**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| ➢ முன்னுரை |
| ➢ விண்வெளியில் தமிழரின் அறிவு |
| ➢ கல்பனா சாவ்லா |
| ➢ விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை |
| ➢ முடிவுரை |

**முன்னுரை :**

விண்வெளியில் தமிழரின் அறிவு பற்றி இங்குக் காண்போம்.

**விண்வெளியில் தமிழரின் அறிவு :**

விண்வெளியில் தமிழர்கள் நிறைந்த அறிவு பெற்றிருந்தனர்.

**கல்பனா சாவ்லா :**

*1983*-ஆம் ஆண்டு நாசா அமெஸ் ஆராய்ச்சிக்கூடத்தில் துணைத் தலைவராகப் பணியாற்றினார்.

**விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை :**

மாணவ சமுதாயத்தினர் விண்வெளி ஆய்வில் ஈடுபட வேண்டும்.

**முடிவுரை :**

விண்வெளியில் தமிழரின் அறிவு பற்றி இங்குக் கண்டோம்.

**குறிப்பு :**

| | |
|---|---|
| தலைப்பு | - 1 (அ) ½ மதிப்பெண் |
| குறிப்புச்சட்டகம் | - 1 (அ) ½ மதிப்பெண் |
| முன்னுரை | - 1 மதிப்பெண் |
| முடிவுரை | - 1 மதிப்பெண் |
| உட்தலைப்பு | - 4 மதிப்பெண் |

தகுந்த மேற்கோள் கொடுக்கப்பட்டு விளக்கம் கொடுத்தால் உட்தலைப்பிற்கு 4 மதிப்பெண்.

### இயல் - 1

2. **குமரிக் கடல் முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்குப் பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவையாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம் மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள் - இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**முன்னுரை :**

கண்கவரும் காட்சிகள், பொருட்கள் இருக்கும் அரசுப்பொருட்காட்சிப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**அரசுப்பொருட்காட்சி அறிவிப்பு :**

ஜுன் 1 முதல் ஜுன் 30 வரை 30 நாட்கள்.

**அமைவிடம் :**

நேரு நகர், கடலூர்.

**அங்காடிகள் :**

உணவுப்பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், ஆடை அணிகலன்கள் உள்ள அங்காடிகள் இருந்தன.

**பல்துறைக் கண்காட்சிக் கூடங்கள் :**

குழந்தைகள், பெரியோர்கள் விரும்பும் வகையில் கைவினைப் பொருட்கள் பாரம்பரிய முறையில் மிகுந்திருந்தன.

**பொழுதுபோக்கு விளையாட்டுகள் :**

பெரியவர், சிறியவர் என இருவரும், இருபாலரும் விளையாடும் வகையில் இருந்தன.

**எ.கா :**

ஊஞ்சல், ராட்டினம், சதுரக்கல், பூப்பந்து.

**பலவித உணவுகள் பெருமித உணர்வு :**

மருந்தேயாயினும் விருந்தொடு உண் என்பதற்கேற்ப சிறுதானிய வகை உணவுகள் கிடைத்தன. விருந்தோம்பல் பண்பு பெருமித உணர்வை ஏற்படுத்தியது.

**அரசின் நலத்திட்டங்கள் :**

அரசின் நலத்திட்டங்கள் *28* துறைகள் அரங்குகளாக அமைக்கப்பட்டிருந்தன. கடன் பெறுவது, திரும்ப செலுத்துவதுப் பற்றி விளக்கப்பட்டன.

**பேச்சரங்கம் :**

பட்டிமன்றம், வினாடி வினா, உடனடி தலைப்பில் பேசுதல் எனப் பல்வேறு பேச்சரங்குகள் இருந்தன.

**நிகழ்த்தப்பட்ட நிகழ்கலைகள் :**

நடனம், பொம்மலாட்டம், குதிரையாட்டம், ஒயிலாட்டம் எனப் பல்வேறு நிகழ்கலைகள் நிகழ்த்தப்பட்டன.

**முடிவுரை :**

உயிர்த்தெழு மானிடா!
உன்னத உலகினில் உன் நல்மனம் பேணியே!
இன்புற்று வாழ்ந்திடு மானிடா!

பொருட்காட்சிக்குச் சென்று வருவதால் உடல், மன நலம் பெற்று வாழ்வோம் என்பதை இக்கட்டுரையில் கண்டோம்.

## கூடுதல் பொதுக்கட்டுரைகள் :

**4. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பு ஒன்று தருக. (அரசு மாதிரி வினாத்தாள் 2019)** முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர் - நாட்டுப்பற்று – மொழிப்பற்று – பொது வாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.

### அறிஞர் அண்ணா

**குறிப்புச்சட்டகம்**

- முன்னுரை
- தமிழகம் தந்த தவப்புதல்வர்
- நாட்டுப்பற்று
- மொழிப்பற்று
- பொது வாழ்வில் தூய்மை
- எளிமை
- மக்கள் பணியே மகத்தான பணி
- முடிவுரை



• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



முடிவுரை :

'இனியதோர் உலகைப் படைப்போம்!'

என்பதற்கேற்ப சுற்றுச்சூழலைத் தூய்மையாக வைத்திருப்போம். சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருப்பதின் அவசியம் பற்றி இக்கட்டுரையில் கண்டோம்.

**12. கீழ்க்கண்ட குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பு ஒன்று தருக.**

குறிப்புகள் : முன்னுரை – சேமிப்பின் அவசியம் – சேமிப்பின் பயன் – இலக்கியங்களில் சேமிப்பு – சிக்கன வாழ்வு – மாணவப்பருவத்தில் சேமிப்பு – முடிவுரை.

**சிக்கனமும் சிறுசேமிப்பும்**

குறிப்புச்சட்டகம்

- முன்னுரை
- சேமிப்பின் அவசியம்
- சேமிப்பின் பயன்
- இலக்கியங்களில் சேமிப்பு
- சிக்கன வாழ்வு
- மாணவப்பருவத்தில் சேமிப்பு
- முடிவுரை

**முன்னுரை :**

'சிறு துளி பெரு வெள்ளம்' என்னும் பழமொழிக்கேற்ப சிக்கனமாக இருந்து சேமிப்பது பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**சேமிப்பின் அவசியம் :**

தேவையற்ற செலவினைத் தவிர்க்க வேண்டும். மனிதனின் தரத்தை உயர்த்த சேமிப்பு அவசியமாகிறது.

**சேமிப்பின் பயன் :**

ஓய்வு காலத்தில் சேமிப்பு நமக்குப் பயன்படும். எதிர்பாராத செலவுகளுக்குச் சேமிப்பு பயன்படும்.

'வரும் முன் காப்போம்'

**இலக்கியங்களில் சேமிப்பு :**

- பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்கிறார் திருவள்ளுவர்.
- எய்ப்பினில் வைப்பு.
- வயதான காலத்தில் பொருள் தேவை என்பதை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

**மாணவப்பருவத்தில் சேமிப்பு :**

மாணவர்கள் சிறுசேமிப்பு கணக்கைத் தொடங்கிச் சேமிக்கலாம். பலவகையான அஞ்சலக சேமிப்பை மாணவர்கள் பின்பற்றி சேமிக்கலாம்.

**முடிவுரை :**

"சிறுகக் கட்டிப் பெருக வாழ்"
"பணம் பத்தும் செய்யும்"
"பணமில்லாதவன் பிணம்"

உடல், மனம் எதிர்காலத்தில் வளமுடன இருக்க சேமிப்பு அவசியம். சிக்கனமாக இருந்து சேமிப்பைப் பின்பற்ற வேண்டும் என்பதை இக்கட்டுரையில் கண்டோம்.

**13. கீழ்க்கண்ட குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பு ஒன்று தருக.**

குறிப்புகள் : முன்னுரை – பாரதிதாசனும் தமிழும் – தமிழ் வளம் பெற ஆற்ற வேண்டிய பணிகள் – பாரதிதாசன் போற்றும் பெண்கல்வி – பெண்ணியம் – முடிவுரை.

**சிக்கனமும் சிறுசேமிப்பும்**

குறிப்புச்சட்டகம்

- முன்னுரை
- பாரதிதாசனும் தமிழும்
- தமிழ் வளம் பெற ஆற்ற வேண்டிய பணிகள்
- பாரதிதாசன் போற்றும் பெண்கல்வி
- பெண்ணியம்
- முடிவுரை





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**நமது கடமைகள் :**

வைரஸ் தொற்றின் தீவிரம் அறிந்து நம்மைப் பாதுகாத்துப் பிறரைப் பாதுகாக்க உதவவேண்டும். மருத்துவர் உதவியை நோயின் தீவிரம் அறிந்து பயன்படுத்த பொது மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

**முடிவுரை :**

பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்திய கொரோனா வைரஸை தடுக்க அரசுடன் சேர்ந்து நாமும் பணியாற்ற வேண்டும். கொரோனா பெருந்தொற்றிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வதைப் பற்றி இக்கட்டுரையில் கண்டோம்.

## 38. அறிவை விரிவு செய்

**இயல் - 1**

| | | |
|---|---|---|
| நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் | - | முனைவர் சேதுமணி மணியன் |
| தவறின்றித் தமிழ் எழுதுவோம் | - | மா.நன்னன் |
| பச்சை நிழல் | - | உதயசங்கர் |

**இயல் - 2**

| | | |
|---|---|---|
| குயில்பாட்டு | - | பாரதியார் |
| அதோ அந்தப் பறவை போல | - | ச.முகமது அலி |
| உலகின் மிகச்சிறிய தவளை | - | எஸ்.ராமகிருஷ்ணன் |

**இயல் - 3**

| | | |
|---|---|---|
| திருக்குறள் தெளிவுரை | - | வ.உ.சிதம்பரனார் |
| சிறுவர் நாடோடிக் கதைகள் | - | கி.ராஜநாராயணன் |
| ஆறாம் திணை | - | மருத்துவர் கு.சிவராமன் |

**இயல் - 4**

| | | |
|---|---|---|
| பஞ்ச பூதங்களின் அறிவியல் கதைகள் | - | நீலமணி |
| அன்றாட வாழ்வில் அறிவியல் | - | ச.தமிழ்ச்செல்வன் |
| காலம் | - | ஸ்டீபன் ஹாக்கிங் |

**இயல் - 5**

| | | |
|---|---|---|
| சிறந்த சிறுகதைகள் பதின்மூன்று | - | தமிழில் வல்லிக்கண்ணன் |
| குட்டி இளவரசன் | - | தமிழில் வெ.ஸ்ரீராம் |
| ஆசிரியரின் டைரி | - | தமிழில் எம்.பி.அகிலா |

**இயல் - 6**

| | | |
|---|---|---|
| தேன்மழை | - | சுரதா |
| திருக்குறள் நீதி இலக்கியம் | - | க.த.திருநாவுக்கரசு |
| நாட்டார் கலைகள் | - | அ.கா.பெருமாள் |

**இயல் - 7**

| | | |
|---|---|---|
| என் கதை | - | நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் |
| வேருக்கு நீர் | - | ராஜம் கிருஷ்ணன் |
| நாற்காலிக்காரர் | - | ந.முத்துசாமி |

**இயல் - 8**

| | | |
|---|---|---|
| அறமும் அரசியலும் | - | மு.வரதராசனார் |
| அபி கவிதைகள் | - | அபி |
| எண்ணங்கள் | - | எம்.எஸ்.உதயமூர்த்தி |

**இயல் - 9**

| | | |
|---|---|---|
| யானை சவாரி | - | பாவண்ணன் |
| கல்மரம் | - | திலகவதி |
| அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் | - | ந.முருகேசபாண்டியன் |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# 39. வினாவங்கியில் இடம் பெற்றுள்ள வினாத்தாள்களுக்கான விடைக்குறிப்புகள்

## அரையாண்டுத் தேர்வு

1. ஆ. மணி வகை
2. அ. கடல் நீர் ஆவியாகி மேகமாதல்
3. அ. வேற்றுமை உருபு
4. இ. ஐந்தாம்
5. ஈ. இலா
6. ஈ. மன்னன் இறைவன்
7. இ. மார்கழி, தை
8. ஆ. தன்வரலாற்று நூல்
9. ஆ. அதியன் ; பெருஞ்சாத்தன்
10. இ. உழவு, ஏர், மண், மாடு
11. ஈ. தலையில் கல் சுமப்பது
12. ஆ. பரிபாடல்
13. ஆ. கீரந்தையார்
14. இ. அடுக்குத்தொடர்
15. ஆ. யுகம்

## முதல் திருப்புதல் தேர்வு

1. இ. எம் + தமிழ் + நா
2. இ. அன்மொழித்தொகை
3. ஆ. நறுந்தொகை
4. ஈ. வானத்தையும் பேரொலியையும்
5. அ. சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
6. ஆ. தளரப் பிணைத்தால்
7. இ. முல்லை
8. அ. சேர
9. ஈ. வள்ளல்கள்
10. ஆ. அகவற்பா
11. ஆ. சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
12. இ. முல்லைப்பாட்டு
13. ஈ. நப்பூதனார்
14. ஆ. சக்கரம்
15. அ. பாடு இமிழ், கோடுகொண்டு

## இரண்டாம் திருப்புதல் தேர்வு

1. ஈ. பாடல்; கேட்டவர்
2. ஆ. மோனை, எதுகை
3. ஈ. சிற்றூர்
4. இ. மரபு வழுவமைதி
5. ஆ. தமிழ்
6. ஈ. அங்கு வறுமை இல்லாததால்
7. ஈ. நெறியோடு நின்று காவல் காப்பவர்
8. அ. கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
9. அ. கண்ணதாசன்
10. அ. விளக்கு
11. ஆ. நாகூர்ரூமி
12. அ. சிலப்பதிகாரம்
13. அ. வண்ணமும், சுண்ணமும்
14. அ. இளங்கோவடிகள்
15. அ. நெய்பவர்





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## மாதிரி வினாத்தாள் - 6

1. அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்
2. ஈ) மழைமுகம் காணாப் பயிர்போல
3. ஆ) விருந்தினரை ஏழு அடி வரை நடந்து சென்று வழியனுப்பினர்.
4. ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றது.
5. அ) வேற்றுமை உருபு
6. ஆ) மார்ஷல் ஏ.நேசமணி
7. அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது.
8. இ) வரகு, சாமை
9. அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை
10. ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.
11. ஈ) அதியன்; பெருஞ்சாத்தன்
12. இ) அடுக்குத்தொடர்
13. அ) கீரந்தையார்
14. ஆ) அறிவியல் செய்தி
15. இ) வானம், பேரொலி, யுகம்







Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# நமது வெளியீடுகள்

| | |
|---|---|
| XII | தமிழ் & ஆங்கிலம் |
| XI | தமிழ் & ஆங்கிலம் |
| X | தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் & சமூக அறிவியல் |
| IX | தமிழ் & ஆங்கிலம் |

KSJ TRB ACADEMY
Knowledgeful • Successful • Joyful
KSJ TRB ACADEMY
Namakkal

**KSJ Publications**
272 E3 C, Ezhil Nagar, R.P. Pudur
Namakkal - 637 001
E-mail : ksjpublications@gmail.com
Web : www.ksjeduserves.com
For Orders : 89036 85635 / 74180 21847

₹230